Registered as a Newspaper

நவநாகரிக யுவதிகளே!
அழகு சாதனப் பொருட்கள்
★ பாக்ஸ் ★ பேஸ்
★ தொப்பிகள்
விளையாட்டுப்பொருட்கள்
பான்ஸி கட்லரி சாமான்களை
நம்பகமாகவும் மலிவாகவும்
வாங்க நாடுங்கள்!
LUCKY-7
61 New West Market,
Jaffna.

# உதயன்

விலை ரூ 2/50

வடபகுதி சிகை அலங்கரிப்பாளர்களே!
உங்களுக்குத் தேவையான சகல ஆயுத உதிரிப்பாக உபகரணங்களுக்கும்
வாசனைப் பொருட்களுக்கும் மற்றும்
பிளாஸ்ரிக் வாளிகள், ஏறு வகைகளுக்கும்
நாட வேண்டிய இடம்;
லக்கி - 7
61, நவீன மேற்குச்சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஞூ ம்ரீ ஆவணி 01 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 14 (17 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 219

## ● ஒரே ஒரு எக்ஸ்றே கருவி!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 17
யாழ் ஆஸ்பத்திரியில் நான்கு எக்ஸ்றே கருவிகள் இருக்கின்ற போதிலும் ஒரேயொரு கருவி மாத்திரமே இயங்கும் நிலையில் உள்ளது.

தென்பகுதியில் இருந்து எக்ஸ்றே கருவி சம்பந்தப்பட்ட தொழில் நுட்பவியலாளர்கள் இங்கு வர மறுப்பதே இவை திருத்தப்படாமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது இயங்கிவரும் எக்ஸ்றே கருவியும் பழுதடையும் நிலை ஏற்பட்டால் அதனால் நோயாளிகள் பெரிதும் பாதிப்படைவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

# தெரிவிக்கப்பட்ட யோசனைகள் குறித்து
# இந்தியாவிடம் விளக்கம் கேட்க
# பிராட்மன் புதுடில்லி செல்வார்

## ● இடையில் அகப்படும் பொது மக்கள்!

தென்பகுதியில் தீவிரவாதிகள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும்போது பொதுமக்களும் இடையில் அகப்பட்டுக் கொள்கின்றனர்.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் முன்கண்ட தகவலை வெளியிட்டார். (ஒ-எ)

### ஜனாதிபதி வழிபாடு

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று கண்டிக்கு விஜயம் செய்து தலதா மாளிகையில் வழிபாடு செய்தார்.

## பிரேமதாஸாவின் பிரதிநிதியாக பேச்சுவார்த்தை நடத்துவார்

கொழும்பு, ஆக. 17

அமைதிப்படை விலகல் விடயம் தொடர்பாக புதுடில்லியில் தெரிவிக்கப்பட்ட இந்திய யோசனைகள் குறித்து இந்திய அரசிடம் மேலதிக விளக்கங்களைக் கோருவதற்கு, இலங்கை ஜனாதிபதி திரு, ஆர். பிரேமதாஸாவின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிராட்மன் வீரக்கோன் விரைவில் புதுடில்லி செல்லவிருக்கிறார்.

ஜனாதிபதி பிரேமதாஸா தமது பிரதிநிதியாக பிராட்மன் வீரக்கோனை புதுடில்லி அனுப்புவதற்கு முடிவு செய்திருப்பதாக கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

புதுடில்லி யோசனைகளில் என்ன மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா விரும்புகின்றாரோ, அவை பற்றி திரு. பிராட்மன் வீரக்கோன் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

புதுடில்லி யோசனைகளில் என்ன மாற்றங்களை பிரேமதாஸா விரும்புகிறார் என்பதை அவர் இன்னமும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

தான் நினைத்துள்ள அந்த உத்தேச மாற்றங்கள் பற்றிய இந்தியாவின் நிலைப்பாட்டை இராஜதந்திர ரீதியில் அறிந்து கொண்ட பின்னரே, அவற்றைப் பகிரங்கப்படுத்த ஜனாதிபதி பிரேமதாஸா விரும்புகிறார் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-எ)

## இந்தியத் தூதர் - ரஞ்சன் கொழும்பில் பேச்சு!

அமைதிப்படைவிலகல் விடயம் தொடர்பாக புதுடில்லியில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவும், கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்திராவும் கொழும்பில் அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

புதுடில்லி யோசனைகளில் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு உள்ள கருத்துவேறுபாடான அம்சங்கள் குறித்து இருவரும் அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும்—

புதுடில்லி யோசனைகள் குறித்து இலங்கை அரசின் உத்தியோகபூர்வ பதில் ஒரு வாரகாலத்தினுள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இந்தியாவின் நிலைப்பாடு; எதிர்க்கட்சிகளுக்கு விளக்கம்

### கொழும்பில் நடந்து வருகிறது

கொழும்பில் உள்ள ராஜதந்திரிகள் எதிர்க்கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து இந்திய நிலைப்பாட்டை விளக்குவதில் ஈடுபட்டுள்ளனர் என்று அறியவந்துள்ளது.

இந்தியத் தூதர் திரு: எல்: எல். மெஹ்ரோத்ரா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் திரு. மெஹ்ரோத்ரா சந்தித்து இந்திய நிலைப்பாடு பற்றி விளக்கினர்.

இப்படியாக ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கும் விளக்கம் அளிக்கப்படுவதாக அறியவருகிறது. (ஒ-எ)

### வல்வைச் சம்பவங்கள்:

## இந்திய தூதரகத்தின் பதில் விரைவில் கிடைக்கும்

வல்வெட்டித்துறை சம்பவங்கள் குறித்து இந்திய தூதரகத்தின் பதிலை இலங்கை அரசு எதிர்பார்த்திருக்கிறது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தை அடுத்து வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வல்வைச் சம்பவங்கள் குறித்து இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டோம்: பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதை தூதரகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பிரஸ்தாப சம்பவங்கள் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்ரா விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 2 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள் பற்றி நான் இந்தியத் தூதரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

இது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக இந்தியத் தூதர் என்னிடம் தெரிவித்தார்.

விசாரணை நடத்த நடாளுமன்றக்குழு ஒன்றை வல்வெட்டித்துறைக்கு அனுப்புவது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றார். (ஒ-எ-21)

## இந்திய லோகசபையிலும் வல்வைசம்பவம் பிரஸ்தாபம்

வல்வெட்டித்துறைக் கொலைகள் பற்றி புதுடில்லி லோகசபாவில் ஜனதாக்கட்சி எம்; பியான ஜனாப்: செய்யது சகாபுதீன் கேள்வி கேட்டார்.

இக் குற்றச்சாட்டு இந்திய ஜவான்களின் பெருமையையும் இந்திய ஆயுதப் படையையும் பாதிப்பதாக உள்ளது. ஆகவே இது பற்றிய முழு விவரம் வெளியிடப்படவேண்டும்.

இப்படி அவர் சபாநாயகர் பல்ராம் ஜாக்கரைக் கேட்டுக் கொண்டார். (அ-எ)

## தெற்கில் 5 படையினர் பலி; 12 பொதுமக்களும் மரணம்!

கொழும்பு, ஆகஸ்ட் 17

தென்பகுதியில் ஐந்து படையினரும் நான்கு தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர் என்று அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இனந்தெரியாதவர்களால் கடந்த 24 மணித்தியாலங்களில் 12 பொதுமக்களும் கொல்லப்பட்டனர் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

★ வடமேற்கு மாகாணத்தில் 635 பேர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்; இவர்களில் 136 பேர் தீவிரவாத சந்தேகநபர்கள் என்று இனங்காணப்பட்டது.

★ மத்தரட்டவில் பாலம் ஒன்றின் அருகில் படையினர் -தீவிரவாதிகள் மோதலில் முக்கிய தீவிரவாதத் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டார்;

★ களுத்துறையில் சமத் தொழில் சேவை நிலையம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது;

★ பியகந்தலையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், உள்ளூர் ஐ. தே. க. பிரமுகர் காமினி திஸாநாயக்கா என்பவரைச் சுட்டுக் காயப்படுத்தினர்;

★ கொழும்பு டவர் மண்டபத்திற்கு அருகில் என்-லோன் குழாய் ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது; படை

(8-ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் போனதுடன் மின் கம்பிகளும் இல்லை!

யாழ்ப்பாணம், ஆக. 17

மின்சார விநியோகந்தான் இல்லை என்றால் மின் கம்பிகளும் இல்லை என்ற நிலை யாழ்ப்பாண மாவட்டத்தின் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ளது.

பிரஸ்தாப பகுதிகளில் வீதியோரங்களில் இருந்த மின் கம்பிகள் மாயமாக மறைந்து விட்டனவாம்.

மின்சாரம் தடைப்பட்டுள்ளதை சாதகமாகப் பயன்படுத்தி, சமூகத்துக்கு ஒவ்வாத சிலர் மின்கம்பிகளைத் திருடும் வேலையில் ஈடுபட்டு வருவதாக அறியவருகிறது.

இப்படித் திருட்டில் ஈடுபட்ட சிலர் சுழற்சி முறையில் விநியோகிக்கப்படும், மின்சாரம் தாக்கி காயமடைந்தும் உள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அலுமினியத்திலான மின் கம்பிகளை அதிக விலைக்கு விற்கலாம் என்பதாலேயே இவர்கள் இந்தக் கம்பித் திருட்டில் ஈடுபட்டுள்ளார்கள் எனச் சொல்லப்படுகிறது. (ஒ-9)

## தம்பாலை வாசிகள் இருவர் கொலை

சந்நிதி கோயில் வீதி தம்பாலைச் சந்தியில் செவ்வாய்க்கிழமை வாலிபர் ஒருவர் சூடுபட்டுக் கொலையுண்டார். அவரின் சடலம் தம்பாலைச்சந்தியில் காணப்பட்டது:

கொலையுண்டவர் தம்பாலையைச் சேர்ந்த வீரக்கோன் பவி மன்மதராசா என்பவராவார்.

இதேவேளை-

இடைக்காடு- விமானநிலைய வீதி சனசமூக நிலையச்சந்தியில் நேற்றுக் காலையில் மற்றொரு இளைஞரின் சடலம் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டது.

சடலமாக கண்டெடுக்கப்பட்ட வாலிபர் தம்பாலையைச் சேர்ந்த ஜீ: இராசலிங்கம் (வயது-25) எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-11)

## தொண்டர் ஆசிரியர்கள் எதிர்ப்பு!

மட்டக்களப்பில் தொண்டர் ஆசிரியர்கள் தமக்குச் சரியான பதில் தரும் வரை பயிலுநர் ஆசிரியர் தெரிவை எதிர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட இருப்பதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை, பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் வேலைகள் மட்டக்களப்பில் நடைபெற்று வருகின்றன. (ஒ-21)

### முச்சந்தி முரளி



உவை ஒரு ஆசிரிய நியமனம் செய்யிறதும் போதும் அடிக்கடி திகதிகளையும் திட்டங்களையும் மாத்திறதும் போதும் போதும் என்டு புளிக்கப் போச்சுது......!

### 25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர் தெரிவு:

## எழுத்துப் பரீட்சை பின்போடப்படலாம்

25 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர்களுக்கு அகில இலங்கை ரீதியில் நடத்த ஏற்பாடாகி இருந்த எழுத்துப் பரீட்சை மேலும் பின் போடப்படலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது.

ஆகப் பிந்திய ஒழுங்குகளின் பிரகாரம் பிரஸ்தாப பரீட்சைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவது தெரிந்ததே.

தென்னிலங்கை தீவிரவாதிகள் புதிய நியமனங்கள் எதையும் இப்போதைக்கு மேற்கொள்ளப்படக் கூடாது என ''உத்தரவு'' பிறப்பித்துள்ளனராம்.

இதனை அடுத்து தென் பகுதி கல்வித் திணைக்களங்கள் பல பிரஸ்தாப நியமனங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்குகின்றன; இன்னும் செயலில் இறங்கவில்லை. இதனை அடுத்து பிரஸ்தாப எழுத்துப் பரீட்சையை அகில இலங்கை ரீதியில் நடத்த முடியாதுள்ளதாகவும், அதன் நிமித்தம் பரீட்சையை மேலும் ஒத்திப்போடுவது பற்றி உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறியவருகிறது. (ஒ-9)

### வேலைநிறுத்தம் செய்துவரும்

## ஆஸ்பத்திரி ஊழியர்களின் கோரிக்கை நிராகரிப்பு!

கொழும்பு, ஆக 17

வேலைநிறுத்தம் செய்துவரும் ஆஸ்பத்திரி ஊழியர்களின் கோரிக்கையை அமைச்சரவை நேற்று நிராகரித்தது.

கைதுசெய்யப்பட்ட கொழும்பு பெரியாஸ்பத்திரி ஊழியர்கள் இருவரையும் விடுதலை செய்யக்கோரி சகல மாவட்டங்களைச் சேர்ந்த ஆஸ்பத்திரி ஊழியர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விவகாரம் குறித்து நேற்றுக்கூடிய அமைச்சரவை ஆராய்ந்து கைதான இருவரும் தீவிரவாதக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களெனப் பலமாகச் சந்தேகிக்கப்படுவதால் அவர்களை விடுதலைசெய்ய முடியாது என்று அமைச்சரவை தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவின் எதிரொலியாக ஆஸ்பத்திரி ஊழியர்களின் வேலை நிறுத்தம் மேலும் பரவலாம் என அஞ்சப்படுகிறது. (ஒ-21)

### பத்தாயிரம் பேர்!

கொழும்பு, ஆக: 17

கொழும்பும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள அரச மருத்துவமனைகளில் தற்போது வேலை நிறுத்தம் செய்துவரும் டாக்டர்கள், தாதிமார்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 10 ஆயிரம் என்று பி.பி.சி. அறிவித்தது: (அ-எ)

## டாக்டர்களும், தாதிகளும் விடுதியிலிருந்து சென்றனர்

கொழும்பு ஆகஸ்ட் 17

கொழும்பு ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் டாக்டர்களும் தாதிகளும் ஆஸ்பத்திரி விடுதிகளைவிட்டு வெளியேறிவிட்டனர்;

விடுதிகளைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று அவர்கள் பணிக்கப்பட்டிருந்தனர்:

இதேவேளை- ஆஸ்பத்திரி வார்டுகளில் தங்கியிருந்த பெரும்பாலானநோயாளர்கள் வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர்.

தனியார் ஆஸ்பத்திரிகள்சில மூடப்பட்டுவிட்டன. வேறுசில தனியார் ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களை அனுமதிக்க மறுக்கின்றனவாம்: இதற்கானகாரணங்களைத் தெரிவிக்க அந்த ஆஸ்பத்திரி நிர்வாகங்கள் மறுத்துவிட்டன. (ஒ-எ)

## கலிகை, மந்திகையில் நேற்று ஷெல் தாக்குதல்

கரவெட்டி, ஆக. 17

கலிகை, மந்திகை முகாம்களில் இருந்து நேற்றுப் பகல் 11 மணியளவில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன: துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன:

மேற்படி முகாம்கள் மீது கிரனேட் வீச்சு, மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதை அடுத்தே பதில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது:

இரு முகாம்களில் இருந்தும் ஏவப்பட்ட ஷெல்கள் துன்னாலைப் பகுதிகளில் போய் வீழ்ந்தன.

இதேவேளை கரவெட்டிப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவிவருகிறது. (ஒ-70)

### சுபநேரம்

[17 - 8 - 1989]

ஆவணி 01 — வியாழக்கிழமை

நக்ஷத்திரம்: அவிட்டம்

சுபநேரம்:

07-35 முதல் 09-05 வரை ராகுகாலம்:

01-35 முதல் 03-05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்;

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

[Cobb] புரொயிலர் குஞ்சுகள் (23 - 08 - 89) புதனும் (Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் (30 – 08 - 89) புதனும் விநியோகிக்கப்படும்: (தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்க. இல: 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு:- எங்கள் குஞ்சுகளுக்கு இரவில் லைட் அவசியமில்லை.

(1606)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் Hybro புரொயிலர் குஞ்சுகள் 17, 18 ஆந் திகதிகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படிலேன் கொக்குவில்.

(1610)

### OH HOLY SPIRIT

Thou who makes me see everything and shows me the way to reach my ideal. Thou who gives me the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I in this short dialogue want to thank thee for everything and confirm once more that I never want to be separated from thee no matter how great material desire may be. I want to be with thee and my loved ones in your perpetual glory.

-RATNAKANTHY

(1616)

### சேவை

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு அண்மையில் பாதுகாப்பான சூழலில் பெண்களுக்கு உணவுடன் இருப்பிட வசதிகள் உண்டு: 576, C/o Uthayan: (1601)

### தேவை

யாழ் நகரில் பிரபல்யமான வீடியோ ஸ்தாபனம் ஒன்றிற்கு வீடியோ படப்பிடிப்பில் நல்ல அனுபவம் வாய்ந்த கமராமென் ஒருவர் தேவை. தொடர்பு கொள்க இல: 27, 3ஆவது ஒழுங்கை: மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-3051)

### தவறிவிட்டது

வேலாயுதம் விக்கினேஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டை திருநெல்வேலி பஸ்ஸில் பேர்ஸ்சுடன் தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இந்த விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். வே. விக்கினேஸ்வரி 18/2யாழ்வீதி, யாழ்ப்பாணம்:

(1533)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள், Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3264)

### கல்வி

பாலர்ஆசிரியர் பயிற்சிநெறிக்குவிண்ணப்பங்கள்கோரப்படுகின்றன க. பொ. த. [சா/த] சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம்: சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புகள் நடைபெறும். நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம், (1520)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் கனகசிங்கம் கலாரஞ்சன்

அன்னையின் மடியில்: 10 - 12 - 1966
ஆண்டவன் அடியில்: 17 - 08 - 1986

பஞ்சையே திரித்தெடுத்தப் பல நிற நூல்களாக்கி
சஞ்சையே பொரித்தெடுத்து கூவிடும்
சேவலாக்கி வானகமே போற்ற வையகமே
வாழ்த்த ஊர்போற்ற வாழ்ந்து எம் நெஞ்சையே
நெகிழ வைத்த எமதருமைச் செல்வமே!
அடையட்டும் உன் ஆத்மா இறைசாந்தி.

உன்பிரிவை நினைவுறும்:
வ. கனகசிங்கம் (தந்தை), தவமணி (தாய்),
சகோதர சகோதரிகள்,
கலாநிதி கலாநாதன் (ஜேர்மனி) கலாரஞ்சினி,
கலாமோகன் (நடேஸ்வரா). சிவஆறுமுகசாமி
(சித்தப்பா) வ. பி. போ. சபை (ய ழ்).

F 32, சீமெந்து குவாட்டர்ஸ்,
காங்கேசன்துறை.

(சி/3225)

# 4 அம்ச இலங்கைப் பிரேரணை: தமிழ்த் தேசியசபை நிராகரிப்பு

திருகோணமலை, ஆக. 17

இந்திய - இலங்கை ஒப்பந்த அமுலாக்கல், இந்திய அமைதிப்படை வெளியேற்றம் என்பன தொடர்பாக இந்திய அரசுடன் இலங்கை அரசின் சார்பில் தாம் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நான்கு அம்சங்கள் கொண்ட இலங்கை அரசின் பிரேரணைகளை தமிழ் தேசியசபை முற்று முழுதாக நிராகரிக்கின்றது.

தமிழ் தேசிய சபை விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று தமிழ் பேசும் மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையான பாதுகாப்பு இல்லாமையைப் பொறுத்தமட்டில் எந்தவித நம்பிக்கையையும் ஊட்டுவதற்குப் பதிலாக மறைமுகமானதும், பாரதூரமானதுமான அச்சுறுத்தலையே இலங்கையின் பிரேரணைகள் உள்ளடக்கியுள்ளன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் மாகாணசபைக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் இன்னமும் வழங்கப்படாத நிலையில் விரைவானதும் வலுவானதுமான அதிகாரப் பரவலாக்கத்திற்கான எந்தவொரு திட்டத்தையும் இலங்கையின் பிரேரணை கொண்டிருக்கவில்லை.

மாறாக இந்திய அமைதிப் படையை எப்படியாவது அதிவிரைவாக வெளியேற்றிவிட வேண்டும் என்பதையே ஒரே குறிக்கோளாக இப்பிரேரணைகள் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் தமிழ் பேசும் மக்களின் நலன்கருதி இப்பிரேரணைகளை திட்டவட்டமாக எதிர்க்கவும், முற்று முழுதாக நிராகரிக்கவும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

## நாய்களுக்குத் தண்டனை

வல்வெட்டித்துறை. ஆக. 17

குடக்கம்பரை, புற்றளையில் ஆடு ஒன்றைக் கடித்து அதனைக் கொலை செய்த நாய்கள் விஷம் வைத்துக் கொல்லப்பட்டன.

இதனால் 17 நாய்கள் உயிரிழந்தன.

ஆட்டை இழந்த அதன் உரிமையாளர் இறந்த ஆட்டின்மேல் நச்சுத்திராவகத்தை ஊற்றியதாகவும் —

அந்த இறைச்சியை உண்ட நாய்களே இப்படி உயிரிழந்ததாகவும் — தெரிகிறது.

(உ- 160)


## Engineering Council Examination
## PART I (London) May 90

Weekend Classes for the new Batch of Students will Commence on Saturday 19th August at 9.00 a.m. Limited Vacancies Rush to ensure your place.

## WESTING HOUSE
### INSTITUTE OF TECHNOLOGY

57, HOSPITAL ROAD,
(Koddady Junction)
JAFFNA,

(1617)


# இலங்கை - இந்திய உறவு மோசமாக ஜனாதிபதியின் போக்கே காரணம்

## சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 17

இப்போதைய ஜனாதிபதி ராஜதந்திரமற்ற முறையில் நடந்ததினால் தான், இந்தியாவுடனான உறவு மிகவும் மோசமடைந்துள்ளது.

இவ்வாறு ஐக்கிய சோஷலிச முன்னணியைச் சேர்ந்த திரு. அத்தாவுட செனிவிரத்ன, நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதுடில்லி யோசனைகள் குறித்து நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன பல மகாநாடுகளை கூட்டி எதிர்கட்சிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த போதிலும் தற்போதைய ஜனாதிபதி அதற்கு மாறாக நடந்தமையினால் தான் இன்று சிக்கல் அதிகரித்துள்ளது — என்றும் திரு. செனிவிரத்தின சொன்னார்.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த திரு. புத்திக குருகுலரத்ன உரையாற்றுகையில் கூறியதாவது;

இலங்கை — இந்திய உடன்பாட்டை நான் எதிர்க்கிறேன் இப்பிரச்சினையை நாம் சமாதானமாகத் தீர்த்து வைக்க வேண்டும் இங்கிருந்து இந்திய அமைதிகாக்கும் படை வாபஸ் பெறுவதை கண்காணிப்பதற்காக சர்வதேச குழுவொன்றை நியமிக்க வேண்டுமென்றும் இதற்கு நாம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் "சார்க்" அணி ஆகியவற்றில் உதவியைப் பெறவேண்டும் — என்றார்.

### தமிழரின் பிரதிநிதிகள்

ஈழவர் ஜனநாயக முன்னணியின் உறுப்பினர் திரு. பராஜசிங்கம் அடுத்து உரையாற்றுகையில் கூறியதாவது:

புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட குழுவில் தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவரோ போராட்டக் குழுக்களின் பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ளாதது வேதனைக்குரிய விடயமாகும்—

தமிழ்பேசும் மக்களின் பிரச்சினையை இலங்கை — இந்திய அரசாங்கங்கள் மாத்திரம் பேசித்தீர்த்துவைக்கமுடியாது இந்தப் பேச்சுவார்த்தைகளில் போராளிக் குழுக்களையும் தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு முதல் நடவடிக்கையாக வடக்கு கிழக்கில் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிப்பது அவசியமாகும் என்றார்.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரத்தை பகிர்ந்தளித்தல் அவசியம் என்று வலியுறுத்திய திரு. பராஜசிங்கம் அந்த அதிகாரத்தை அங்கு அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்களுக்கு சிறந்த சேவையைச் செய்வதற்காக பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன பேசுகையில் "இலங்கை-இந்திய உடன்பாட்டைச் செய்து கொண்டதன் மூலம் அரசாங்கம் மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்டது" என்றார்.

### தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

ஒத்திவைப்பு வேளையில் அரசாங்கக் கட்சியின் உதவிப் பிரதம கொறடா ஜனாப் ஏ. எச். எம். அஸ்வர் தமிழ் எழுத்துக்களை சீரமைப்புச் செய்வதை தமிழ்நாடு 1978 லேயே ஆரம்பித்து விட்டது என்றும் சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளும் இதனை ஏற்கனவே செய்திருப்பதால் இந்து சமய கலாசார அலுவல்கள் தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை இங்குமஉடனடியாகஅமுல் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கலாநிதி ஆ. கந்தையா தலைமையில் இதுபற்றி நியமிக்கப்பட்ட குழுதனது அறிக்கையை அமைச்சுக்கு சமர்ப்பித்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்புத்துறை துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் திரு வரதராஜப் பெருமாள் வெளிநாடு செலவதற்கு ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்று கடவுச் சீட்டொன்றை பயன்படுத்தியே சென்றார் என்று கூறினார்.

(அ-5)

# வல்வையில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் விவரம்

வல்வெட்டித்துறை. ஆக17

வல்வெட்டித்துறையில்அண்மையில் நடந்த அசம்பாவிதங்களின் போது பாதிப்படைந்த கடற்றொழிலாளர் விவரம்;

தியாகராசா செல்வசிவம், கந்தசாமி நாகேஸ்வரன், கதிரவேற்பிள்ளை அரிச்சந்திர போஸ், பாலகிருஷ்ணன் கயிலைநாதன், சண்முகம் பிள்ளை பாலேந்திரதாஸ், சிவசுப்பிரமணியம் வேலும்மயிலும், தேசோமயானந்தம் தேவசிகாமணி, வேலுப்பிள்ளை சபாரட்ணம், இராமசாமி சிவசோதி, பழனியாண்டி பாலேஸ்வரன், தனையசிங்கம் ஜெயமோகன், பாலசுப்பிரமணியம் ரவீந்திரராஜா தனையசிங்கம் சிவகுமார், க. இரத்தினவடிவேல், சுப்பிரமணியம் தர்மலிங்கம்.

அந்த அசம்பாவிதத்தில் வீடுகள், கடைகள் சேதமடைந்த மேலும் சிலவிவரம் பாஸ்கரன் பரிமளாதேவி, பத்மநாதன் தேய்வேந்திரராணி, பிரேம்ராஜ் விமலதேவி, கந்தம்மான வேலாயுதம், லிங்கம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், விக்னு டியூசன் சென்ரர், ரொப் ரேடாஸ், திலீபன் கூல்பார், மார்க்கண்டு சைக்கிள் வேக்ஸ், ராஜகுரு ரெயிலறிங்.

(த-160)

## நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக 17

யாழ் மாநகர சபையின் சோலைவரிப்பகுதி அமைய அடிப்படையில் தொழிலாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ் மாநகர சபை அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

பரீட்சார்த்திகள் கல்விச் சான்றிதழ்கள், வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், மற்றும் நற்சான்றிதழ்கள் என்பனவற்றுடன் காலை 9 00 மணிக்கு சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (13)

## தண்ணீர்த் தாங்கி

பண்டத்தரிப்பு, ஆக. 17

தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் தேவஸ்தானம், வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலைக்கு 15,000 ரூபா செலவில் தண்ணீர்த் தாங்கிஒன்றை நிர்மாணித்துக் கொடுததுள்ளது. (120)

## மக்கள் அதிருப்தி

கொடிகாமம் ஆக 17

பொதுமக்களுக்கு சேவையாற்றும் ப. நோ. கூ. சங்கங்களிலும் ஏனைய தனியார் வர்த்தக நிலையங்களிலும், பாவனைப் பொருள்களின் விலை ஏறிவருவதைப் பற்றி மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

(க - 75)


# கேள்வி அறிவித்தல்

## பிரதேச கல்வித் திணைக்களம்-கிளிநொச்சி

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் கட்டட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் கிளிநொச்சி பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி (30. 08. 1989) முற்பகல் 10 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கும் அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், சட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி (25. 08 1989) பிற்பகல் 2 00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக (ரூபா 50/-) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக (ரூபா 250/-) ரூபா இருநூற்றைம்பதும் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப்பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன திணைக்களத்தில் செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி (30. 08. 1989) காலை 11.00 மணிக்கு கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும், அச் சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அது பற்றி அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு ரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் வேலைக்கான கால அட்டவணையின் படியும், ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக் கூடியவர்கள் மட்டும் இவ் வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை பிரதேச கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. கந்தசாமி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி, 15 - 08 - 1989.

| பாடசாலையின் பெயர் | வேலை விவரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| கிளி/அக்கராயன் ம.வித். | பெருந்திருத்த வேலை | 400,000.00 |

(சி-3226)

அந்திய கால சேவையில் புதிய நண்பன்

* எம்பாமிங் * பிரேதப்பெட்டிகள்
* றேஸ் மலர்வளையங்கள்
* ஊர்வல வாகனங்களுக்கு

எம்மை நாடுங்கள்!

# பிறைற் ஹவுஸ்

(புனித யாகப்பர் ஆலய அருகாமை)
No: 210 பிரதான வீதி — யாழ்ப்பாணம்.

(சி/3504)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட பிராந்திய சுகாதார திணைக்களத்துக்கு ஒன்றரைக் கோடி செலவில் புதிய கட்டடம்

## 40 ஆயிரம் சதுர அடி பரப்பை உள்ளடக்கிய 3 மாடிகள் கொண்டது

யாழ்ப்பாணம், ஆக. 17

ஒன்றரைக்கோடி ரூபா செலவில் வட பிராந்தியத்துக்கு புதிய சுகாதாரத் திணைக்களக் கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

40 ஆயிரம் சதுர அடி அளவைக் கொண்ட மூன்று மாடிகளை உடையதாக இக் கட்டடத்துக்கான வரைபடங்களும் தற்பொழுது வரையப்பட்டுள்ளன.

இதேவேளை ஒன்றரைக் கோடி ரூபா செலவில் இதனை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் பணவசதி போதாமை காரணமாக இதற்கு வெளிநாட்டு நிதி உதவிகளும் கோரப்படலாம் எனத் தெரியவருகிறது.

கட்டடம் அமைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மாகாண சபையே மேற்கொள்ளும் என சுகாதாரத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு முடியும்வரை ஏற்கனவே ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சேதமடைந்திருக்கும் சுகாதாரத் திணைக்களக் கட்டடத்தை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-10)

## இரு மாத காலத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ரூ. 15 லட்சம் செலவிட்டது

யாழ்ப்பாணம், ஆக. 17

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி.ஆர்.ஆர்.ஓ) கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்கி உள்ளது.

இதில் முக்கியமாக இறந்த அல்லது காயமடைந்தவர்களின் குடும்பத்தவர்களுக்கும் இடம்பெயர்ந்தவர்கள் உடனடி நிவாரணமாக 90 ஆயிரத்து எழுநூறு ரூபாவும் —

விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் வீட்டுக் கைத்தொழில் ஆரம்பிப்பதற்காக 69 ஆயிரத்து 263 ரூபாவும்—

கிளிநொச்சி பாடசாலைச் சிறுர்களுக்கு சீருடை வழங்கிய வகையில் 49 ஆயிரத்து தொழாயிரம் ரூபாவும்—

பலாலி விமான நிலையத்தில் இருந்து இடம்பெயர்ந்த விவசாயிகளுக்கு 41 ஆயிரத்து இருநூறு ரூபாவும் ரி. ஆர். ஆர் ஓ. செலவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் மட்டும் 9 லட்சத்து 64 ஆயிரத்து 282 ரூபாவை இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

இதில் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு 3 லட்சத்து 44 ஆயிரத்து 670 ரூபாவும்—

சமுதாய முன்னேற்றத்திட்டங்களுக்காக ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 630 ரூபாவும்—

மருத்துவ உதவிகளுக்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்—

ஏனைய உதவிகளுக்காக மட்டும் 3 லட்சத்து 55 ஆயிரத்து 782 ரூபாவும் செலவிடப்பட்டது.

இத்துடன் வடமராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்ட மட்பாண்டத் தொழிலாளர்கள் 65 பேருக்கு கனேடிய தூதுவராலயத்தில் பெறப்பட்ட நிதியினைக் கொண்டு தொழிலை ஆரம்பிக்க ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 300 ரூபாவும் செலவிடப்பட்டது. (த)

## யாழ் .மத்திய தபாலகத்தில் தளபாடப் பற்றுக்குறை

யாழ்ப்பாணம், ஆக. 17

யாழ்ப்பாணம் மத்திய தபால் அலுவலகத்தில் தளபாடப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு அதிகாரிக்கென ஒதுக்கப்பட்ட மேசையில் இரண்டு அதிகாரிகளும் சிலவேளை மூன்று அதிகாரிகளும் இருந்து கடமையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் தபாலக வேலைகள் நத்தைவேகத்தில் செல்வதாக அங்குள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். தபால் அலுவலகத்தில் முக்கிய தஸ்தாவேஜுக்களைப் பாதுகாப்பாக வைப்பதற்குத் தக்க அலுமாரிகள் இல்லை என்றும் தபால்களைக் கட்டுவதற்கு சணல், சாக்கு ஊசி உட்பட தபால்பைகள் கூட இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## வானில் சென்ற பெண் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 17

தொண்டமானாறுப் பகுதியில் வான் ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானது. இதனால் இந்த வானில் பயணம் செய்த இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் அச்சுவேலியைச் சேர்ந்த அன்னலிங்கம் இரத்தினேஸ்வரி (வயது 29) என்பவராவர்.

ரேஸ்தாப பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும், மோதலை அடுத்து அப்பகுதி ஊடாக வந்த மினிவானின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. (அ-9)

## மா ஏற்றிய பணம் வழங்க விவரம் தருமாறு வேண்டுகோள்

வவுனியாவில் இருந்து மா ஏற்றி வந்ததனால், உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியிடம்இருந்து வருமதியாகவுள்ள பணத்தைப் பெறுவதற்கு வேண்டிய விவரங்களைத் தமக்குத் தரும்படி கூட்டுறவு [illegible] உதவி ஆணையாளர் திரு. எஸ். ஐ. நித்தியராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்களின் கூட்டத்தில் கூறினார்.

பொருள் விநியோக இலக்கம், ஏற்றிவந்த திகதி, லொறி இலக்கம், ஏற்றுக் கூலி [illegible] அறிவிக்கப்பட வேண்டிய விவரங்களாகும் என அவர் தெரிவித்தார். (க-120)

## பனம் தும்பில் இருந்து'பிரஷ்' கைதடியில் தொழிற்சாலை

யாழ்ப்பாணம். ஆக 17

பனந்தும்பில் இருந்து தூரிகைகள் 'பிரஷ்' உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை கைதடியில் அமைக்க பனம் பொருள் அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பனை அபிவிருத்திச் சபையினால் பூநகரி, மன்னார், துணுக்காய் ஆகிய பகுதிகளில் உள்ள பனம் தும்புத்தொழிற்சாலைகளில் இருந்து உற்பத்தியாகும் பனம் தும்பில்இருந்தே 'பிரஷ்' உற்பத்தி செய்யப்படவிருக்கிறது.

பனம் தும்புக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல கிராக்கி உள்ள போதும், நிதிப் பிரச்சினையால் கூடுதல் அளவு உற்பத்தி செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை இதற்கான பயிற்சிகளை இலவசமாக அளிப்பதுடன் உபகரணங்களையும் இலவசமாக வழங்கி இத்தொழிலுக்கு ஊக்கமளித்து வருகிறது.

தற்சமயம் குடிசைக் கைத்தொழிலாகவே இத்துறை இருப்பதால் மேலும் அபிவிருத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தென்னந் தும்பை விட பனம் தும்பில் இருந்து உருவாக்கப்படும் தூரிகைகள் நீண்டகாலம் பாவிக்கக் கூடியவை எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-3)

## மாணவருக்கு பணமுடிப்பு

மன்னார் ஆக. 17

மன்னார் மாவட்ட பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றி ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பன்னிரண்டு மாணவ மாணவியருக்கு பணமுடிப்பு வழங்கப்பட [illegible]ருக்கிறது.

இப் பணமுடிப்புக்கான நிதி உதவியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அன்ரன் இமானுவேல் சில்வா தமது நிதியில் இருந்து வழங்கியுள்ளார். (த-ரி)

## மின். சபை பொறுப்பேற்பு

அம்பாறை, ஆக 17

அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேச சபைகளின் கீழும் இயங்கும் மின் திட்டங்களை இலங்கை மின்சாரசபை விரைவில் பொறுப்பேற்கவிருக்கின்றது.

இதன்படி முதன்முதலாக நிந்தவூர் பிரதேச சபையின் மின்சாரப் பிரிவை இலங்கை மின்சாரசபை கடந்த ஆகஸ்ட் 8 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளது. (க-14)

## மோதல்

வவுனியா, ஆக 17

முல்லைத்தீவு, மாவட்டத்தில் உள்ள தண்ணி முறிப்பு, பழம்பாசி பகுதிகளில் கடந்த சனிக்கிழமை மோதல் இடம் பெற்றது.

இப்பகுதிகளில் கடந்த பல தினங்களாகவே தொடர்ச்சியாக விட்டுவிட்டு மோதல்கள் இடம்பெற்று வருவதனால் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாக வவுனியாவுக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-164)

## சென். பற்றிக்ஸ் கல்லூரியில் விசேஷபோதனை நடவடிக்கை

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி 21 ஆம் திகதி முதல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் 10, 11, 12, 13 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு விசேஷ போதனைப் பொருள்களை (Study Packs) வழங்க இருக்கிறது.

12 ஆம், 13 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு பௌதிகவியல், இரசாயனவியல், பொருளாதாரவியல், சமயம் ஆகியன பற்றிய போதனைப் பொருள்களும் 10 ஆம், 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு கணிதவியல், விஞ்ஞானம், தமிழ், சமயம் ஆகியன பற்றிய போதனைப் பொருள்களும் வழங்கப்படும்.

அத்துடன், 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சோதனைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யுமுகமாக இன்று 17 ஆம் திகதி தொடக்கம் வார நாட்களில் விசேஷ வகுப்புகள் நடைபெறும். க[

## மழையால் வெங்காயம் பெரும் அளவு சேதம்

சாவகச்சேரி ஆக. 17

செவ்வாய்க்கிழமை பெய்த மழையினால் இப்பகுதியில் வெங்காயச்செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கிண்டும் நிலையில் இருந்த வெங்காயமும் கிண்டிய நிலையில் கிடந்த வெங்காயமும் அழுகும் நிலையை அடைந்துவிட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ஒருசிலரே வெங்காயத்தைக் கிண்டி வீடு சேர்த்துள்ளனர். (இ- 31)

## அடையாளம் காணாத சடலம்

யாழ்ப்பாணம், ஆக 17

அடையாளம் காணப்படாத சடலம் ஒன்று நேற்று யாழ் பெரியாஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

இறந்தவர் சுமார் 25 வயது மதிக்கத்தக்கவர். சாரம் அணிந்திருந்தார்.

யாழ் பெருமாள் கோயிலடியில் இருந்து இந்தச் சடலம் நேற்றுக் காலை கொண்டுவரப்பட்டது. (இ)

## சிகரெட் வாங்க கியூ

முல்லைத்தீவு, ஆக. 17

முல்லைத்தீவுப் பட்டினத்தின் அநிகாலையில் சிகரெட் பிரியர்கள் சிகரெட் விநியோகஸ்தரின் கடைக்குமுன்னால் கியூவில் நின்று சிகரெட் பெறுகின்றனர்.

சில கடைகளில் மேலதிக விலைக்கு சிகரெட் விற்கப்படுவதாக அறியப்படுகின்றது. (இ- 92)

## திருட்டு

குருநகர், ஆக. 17

யாழ். நவீன சந்தைப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (த- 51)

---

## பொய்யாமொழி

குறள்:

நாண்வேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

பொருள்:

நாணமாகிய வேலியைத் தமக்குக் காவலாகச் செய்து கொள்ளாமல், மேலோர் பரந்த உலகில் வாழும் வாழ்க்கையை விரும்பி மேற்கொள்ளமாட்டார்.

உதயன்

இல 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24806 23078

17 - 08 1989 த. பெ: இலு 55

## கஞ்சிக்குப் பயறு போட்டால்....

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்க உயர் அதிகாரிகளுக்குப் பெரும் பற்றுக்குறை நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது.

அதனால் ஓர் அதிகாரியே பல பதவிகளை வகிக்கிறார். அல்லது உரிய தரத்தைச் சேராத பிறர் அந்தப் பணிகளைச் செய்கிறார்கள். அவ்வாறு பணி ஆற்றுபவர்களுக்கும் வேலைக்குரிய பதவி உயர்வோ அல்லது வேதனமோ வழங்கப்படவில்லை.

இப்படிப் பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இவ்வாறான குறைபாடுகளும், பற்றுக்குறைகளும் அநேகமாக ஏனைய தமிழ் மாவட்டங்களுக்கும் பொதுவானவையே.

அரசாங்க நியமனங்களில், நீண்ட காலமாகத் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவுகளே இவையாகும். தமிழ் மாவட்டங்களின் அதிகாரிகள், ஊழியர்கள் தேவையைக்கருத்திற் கொண்டு, பணியாற்றத் தேவைப்படும் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்து அரசசேவையின் பல்வேறுபட்ட, பல தரமுள்ள பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு நடக்கவில்லை.

சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு நியமனங்கள் செய்யப்பட்ட போதெல்லாம் பேருக்குச் சில தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். சில பதவிகளுக்கு எவருமே நியமிக்கப்பட்டதும் இல்லை. கஞ்சிக்குப் பயறு போடுவது போலவே அரச பதவிகளுக்குத் தமிழர் நியமனங்கள் நடந்தன; நடக்கின்றன.

மாவட்ட ரீதியில் நியமனம் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்ட பதவிகளுக்குக்கூட, தமிழர்கள் வேண்டிய எண்ணிக்கையில் நியமிக்கப்படவில்லை. மாவட்ட ரீதியாகத் தேவைப்படும் அதிகாரிகள், பணியாளர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு நியமனங்கள் நடந்திருந்தால் இந்தப் பற்றுக்குறை நிலைமை ஏற்பட்டிருக்காது.

தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியிலோ, அப்பகுதி வாழ் மக்களின் முன்னேற்றத்திலோ கொழும்பு அரசாங்கங்களுக்கு அக்கறை இருக்கவில்லை. தமிழ் மக்களின் ஆகக் குறைந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட அவை கவலைப்பட்டதில்லை. என்னென்ன வழிகளால், எப்படி எப்படித் தமிழர்களைப் புறக்கணிக்கலாம், ஒதுக்கிவிடலாம் என்ற சிந்தனையுடனேயே அவை முழு அளவில் செயற்பட்டன.

சேவையில் உள்ளவர்கள் ஓய்வு பெற்றாலும் அவர்களின் இடங்களுக்கு பதில் நியமனங்கள் இல்லாத அளவுக்குக் கூட அரச சேவையில் தமிழர் நியமனங்கள் அருகிப் போயின.

அதிகாரப் பரவல், மாவட்ட மட்ட நிர்வாகம், அடிமட்ட மக்களுக்குச் சேவை, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் எல்லாம் தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்த வரையில் வெறும் வெற்றுக் கலசங்களாகவே உள்ளன. ஏட்டுச் சுரைக்காய்களாகவே இன்னமும் உள்ளன.

இந்த நிலை எப்போது மாறும்? எப்போது மாற்றப்படும்? என்பதில் தான் தமிழ் மக்களின் வாழ்வே தங்கியுள்ளது. இது நீண்ட பிரச்சினையாக, முடிவில்லாக் கஷ்டமாகத் தொடரும் வரை பற்றுக்குறைகளும், குறைபாடுகளும் மேலும் வளர்ந்து பெருகவே செய்யும்.

தமிழ் மக்கள் தமது சொந்தத் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து வாழக்கூடிய பூரண அதிகாரமும், தன்னுதிக்கமும் இல்லாதவரை எந்தத் தீர்வும், திட்டமும் அவர்களுக்கு நடைமுறையில் நல்லது செய்ய முடியுமா என்பது பென்னம்பெரிய கேள்விக்குறியாகும்.

---

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## அள்ளிக் கொடுப்பதில் மன்னன்

எடுப்பு

அன்னைக்குச் சிறுபிள்ளை பாலன் — அவன்
அன்பர்க்கு நல்லூரின் வேலன்

(அன்னை)

தொடுப்பு

தந்தைக்கு ஞானத்தைத் தந்தோன் — அவன்
தமிழிற்கு எழில்தந்த சீலன்

(அன்னை)

முடிப்பு

வள்ளிக்கு மாப்பிள்ளை யானேன் — வடி
வானைக்குத் துணையாக நின்றேன்
அள்ளிக் கொடுப்பதில் மன்னன் — அருள்
அமுதைப் படைப்பதில் விண்ணன்

(அன்னை)

நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை
(இன்று நல்லூர் 12ஆம் திருவிழா)

---

## வாசகர் திருமுகம்

### மீளக் குடி அமர்தல் நிவாரணம்

மேற்படி விஷயமாக ஓய்வூதியம் பெறும் விவசாயிகளுக்கு இப்பணம் மறுக்கப்பட்டது. ஓய்வூதியரும் அரசாங்க ஊழியர் என்று தவறுதலாக கணிக்கப்பட்டதே இதற்குக் காரணம். மறுக்கப்பட்ட விவசாயிகள் ஓர் மகஜர் எழுதி உதவி அரசாங்க அதிபர் மூலம் அரசாங்க அதிபருக்கு மூறையிடு செய்தார்கள். அதன் பலனோ அல்லது வேறு மனுக்களின்படியோ புனர் நிர்மாண அமைச்சரின் விளக்கம் தங்களுடைய உதயன் 6- 4- 89இல் பிரசுரமானது.

ஒய்வூதியம் பெறுவோர் அரசாங்க உத்தியோகத்தர் என்று ரூபா 4000/- நிவாரணம் மறுக்கப்பட்டது சரி அல்ல. அவர்களுக்கும் நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று எழுதியிருந்தீர்கள்.

ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் அரசாங்க அதிபரினால் எடுக்கப்படவில்லை. இது நிரந்தர அரசாங்க அதிபர் இல்லாததினால் என்று எண்ணவேண்டியிருக்கிறது. அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

ஓர் பாதிக்கப்பட்டவர்
உரும்பிராய்.

### பாலம் திருத்தம்

9ஆம் திகதி உங்கள் பத்திரிகையில் வந்த பாலம் திருத்தம் என்னும் வாசகர் திருமுகத்தின்படி இப்பாலம் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பாலம் உடைவதற்கு முன்பு ஒரு அடிக்கு ஒரு 'கேடர்' என்ற முறையில் இருந்தது. ஒரு 'கேடர்' உக்கி உடைந்தபடியால் இப்பாலம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இப்பாலத்தைத் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள யாழ். மாநகரசபை மிகவும் கவனமாக இப்பாலத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ப. ராஜா
நல்லூர்.

### முல்லைத்தீவு, பரந்தன் வீதியின் நிலைமை

முல்லைத்தீவு, பரந்தன் வீதியில் புதுக்குடியிருப்பு வரையில் உள்ள பிரதான பாதை கவனிப்பார் அற்ற நிலையில் இருக்கின்றது. கிரவல், மண் ஆகியன பறிக்கப்பட்டுள்ளன. ஆனால் பாதையைச் செப்பனிடுவார் இல்லை. வீதி தேங்கிக் கிடக்கின்றது.

இதனால் வாகனச் சொந்தக்காரர்களுக்குப் பெரும் நஷ்டமும், பிரயாணிகளுக்குப் பெரும் தாமதமும் பாதசாரிகளுக்கு இடையூறும் ஏற்படுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

க. உதயமூர்த்தி
முல்லைத்தீவு.

---

## கண்டதும் கேட்டதும்

ஜனநாயக பாரம்பரிய அரசியலுக்கு ஒரு சிறந்த உதாரண நாடாக சரித்திரகாலம் முதல் பிரிட்டன் கருதப்பட்டு வருகிறது. அத்துடன் பண்புக்கும் பிரிட்டிஷ்காரர்கள் பெயர்போனவர்கள்.

ஆனால் சமீபத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தாட்சர் மனித உரிமையை நிலைநாட்டிய பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பாக பாரிசில் நடந்த வைபவத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரை இதனைக் கேள்விக்குறியாக்கி விட்டது.

மனித உரிமை என்பது பிரெஞ்சுப்புரட்சி வாதிகளால் கண்டு பிடிக்கப்பட்டது அல்ல. அதற்கு முன்னரேயே பிரிட்டனில் அது பிரகடனம் செய்யப்பட்டது என்று திருமதி தாட்சர் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

பிரிட்டிஷ் எதிர்க்கட்சிக்காரர்களான தொழிற் கட்சியினர் விடுவார்களா? சும்மா கிடந்த வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி அவர்களுக்கு.

திருமதி தாட்சருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகும் என்று கூட அவர்கள் சாடத் தயங்கவில்லை. இது தான் பிரிட்டிஷ் ஜனநாயக பாரம்பரியம்.

—செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தலைமை தேவை; தவறினால் பொல்பொட் ஆட்சியே மிஞ்சும்!

## அமைச்சர் காமினி உரை

கொழும்பு, ஆக 17

இலங்கையில் கிராமமட்டத்தில் இருந்து புதிய தலைமைத்துவம் ஒன்று தோன்றவேண்டும்.

இல்லையேல் கம்போடியாவில் பொல்பொட் ஆட்சியின் கீழ் 15 லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டது போன்ற நிலைமைதான் இங்கும் உருவாகும்.

இவ்வாறு அமைச்சர் காமினி திஸநாயக்கா கூறியிருப்பதாக சுதந்திரக்கட்சிப் பத்திரிகை ''தினரஸ'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

அமைச்சர் காமினியின் உரை ஒன்றையே அப்பத்திரிகை நேற்று முன்தினம் பிரசுரித்தது.

அப்பேச்சில் அமைச்சர் மேலும் கூறியிருப்பதாவது:

இன்று நாடே செயலிழந்து நிற்கிறது சரகோஷத்தை மட்டும் அரசியல்வாதிகள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்;

நாம் புதிய பாதையில் செல்லவேண்டும்; இன்றைய அரசியலில் நிச்சயம் மாற்றம் வேண்டும் — என்றார்.

ஆளும் கட்சிக் கூட்டத்தில் அமைச்சர் பேசியபோது—

''ஜெயவர்த்தனவை தவறாக வழிநடத்திய அதே இராணுவ அதிகாரிகள் தான் இன்று தற்போதைய தலைமையையும் தவறாக வழிநடத்துகின்றனர்'' — என்று அமைச்சர் காமினி திஸநாயகா கூறியிருந்தார் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது: (உ-எ)

## சமயச் சூழலில் கல்வி; எதிர்காலம் வளமடையும்

யாழ்ப்பாணம், ஆக.17

''சிறார்கள் சமயச் சூழலிலே கல்வி கற்று இத்தகைய குருபூசைகளிலே பங்கு பற்றித் தமது திறமைகளை வெளிக்கொணர்தல் அவர்களின் எதிர்காலத்தை வளம்பெறச் செய்யும்''

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்க சார்பில் நடைபெற்ற சுந்தரமூர்த்திநாயனார் குருபூசையின்போது சங்கச் செயலாளர் திரு. சி. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயிலில் நடைபெற்ற இப்பூசையில் சங்கத்தால் நடத்தப்படும் பாலர் பாடசாலை சிறுவர்களின் சுந்தரமூர்த்திநாயனார் பற்றிய சிற்றுரைகளும் இடம்பெற்றன.

சிறார்களின் நிகழ்ச்சிகளுக்கு சங்கத் தலைவர் திரு. பொ. தி. சம்பந்தமூர்த்தி தலைமை வகித்தார். (இ-சி)

## அமைச்சரின் வேலையாள் மீது தவறுதலாக துப்பாக்கிச் சூடு

அமைச்சர் விஜேபாலமென்டிஸின் வீட்டு வேலையாள் தவறுதலாக அமைச்சரின் பாதுகாப்பு ஊழியரால் சுடப்பட்டு காயமடைந்தார்.

ஊரடங்குச்சட்ட நேரத்தில் அந்த வேலையாள் அமைச்சரின் வீட்டுக்குள் பிரவேசித்தார். காவலுக்கு நின்ற ஊர் காவல் படை வீரர் யாரோ வெளியார் அத்துமீறி நுழைகிறார் என்று கருதி வேலையாள் மீது சுட்டுவிட்டார்.

என்று பொலிஸ் தலைமைக் காரியாலயப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (த-எ)

## சிறப்பாக நடைபெற்ற மடுமரியன்னை திருநாள்

சரித்திரப் பிரசித்தி பெற்ற மருதமடு மரியன்னை திருநாள் கடந்த செவ்வாய் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பத்தாயிரத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் இவ்வருட ஆவணித் திருவிழாவில் கலந்துகொண்டனர்.

சிங்கள கிறிஸ்தவ மக்கள் இம்முறை மிகவும் குறைந்த அளவில் கலந்துகொண்டனர். எனினும் ஆலய ஆராதனைகள் தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாத்திரிகர் தண்ணீர் தேவைக்கு மிகவும் கஷ்டப்பட்டனர். (உ-51)

## விநியோகம்

திருமலை, ஆக 17

வடக்கு, கிழக்கு மாகாண கோழி வளர்ப்போர்கள் கோழிக்குஞ்சுகள் பெறுவதில் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்க வடக்கு, கிழக்கு மாகாண காணி விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் துரித நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது என அறிவிக்கப்படுகின்றது.

கடந்த ஓரிரு மாதங்களில் மாவட்டத் தலைநகரங்களில் வைத்து ஐம்பதினாயிரம் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டன எனவும் கடந்தவாரம் மட்டும் திருமலை நகரில் 12 ஆயிரம் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அத்தியாவசிய உணவுப் பொருள்களை அதிக விலைக்குவிற்கத் தடை!

அத்தியாவசிய உணவுப் பொருள்களை கூடுதலான விலைக்கு விற்கக்கூடாது என்று தென்பகுதி வர்த்தகர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

தீவிரவாத அமைப்பு ஒன்றே இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

இதன் காரணமாக தென் பகுதியில் உள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் அத்தியாவசியப் பொருட்களைக் காணுவதே அபூர்வமாகிவிட்டது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-எ)

## முஸ்லிம் கல்வி மாநாடு

இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு அதன் நிருவாகத்தைப் பரவலாக்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்தவிருக்கின்றது.

இதன்படி முஸ்லிம் கல்வி மாநாட்டின் மாவட்டக் கிளைகள் நாட்டின் பல மாவட்டங்களிலும் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கின்றன.

எதிர்வரும் அக்டோபர் மாதம் 25 ஆம் திகதி முதல் 1990 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதிவரை இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு அதன் வெள்ளி விழாவைக் கொண்டாடவிருக்கின்றது. (க-14)

# தென்பகுதி பல்கலைக்கழகங்கள் ஜனவரியிலேயே ஆரம்பமாகும்

கொழும்பு, ஆகஸ்ட் 17

தென் இலங்கை பல்கலைக் கழகங்கள் ஜனவரியிலேயே மீண்டும் திறக்கப்படவிருப்பதாக அறியவந்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி கொழும்பில் நடந்த உபவேந்தர்கள் மாநாட்டில் மேற்கண்டவாறு முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அறிய வந்தது.

உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத், துணை அமைச்சர்களான போல் பெரேரா, ரேகன் அபயகுணசேகரா, மானியக்குழுத் தலைவர் உட்பட பல்கலைக்கழக உபவேந்தர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு பல்கலைக் கழகங்களைத் தவிர்ந்த மற்றைய பல்கலைக்கழகங்களைப் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பேற்றுள்ளது என்றும், தென் இலங்கை பல்கலைக் கழகங்களைத் திறப்பதற்கு அவசரம் காட்டவேண்டாம் என்றும், ஜனவரியில் தென் இலங்கை பல்கலைக்கழகங்களை திறக்கலாம் என்றும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டனவாம்.

வடக்கு - கிழக்கு பல்கலைக் கழகங்கள் வழமை போல் செயற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டதாம்.

தென்இலங்கைப் பல்கலைக் கழகங்கள் மீள உயர்கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டபின், சாணமல்போன மாணவர்கள் விடயங்கள் ஆராயப்படவேண்டியுள்ளதாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (ஒ-3)

## களஞ்சியம்

திருகோணமலையில் மருந்து வகைகளைச் சேமித்து வைக்க மருந்துக் களஞ்சியம் ஒன்றை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நல்லூர் உ. அ. அ. பிரிவில் 27,000 பேருக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக; 17

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 25 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 27 ஆயிரத்து 272 குடும்பங்களுக்கு யாழ். ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளை மீளக் குடியமர்தல் நிவாரணத்தை வழங்கியுள்ளது.

இத்தகவலை சிரேஷ்ட வங்கி அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை தற்பொழுது வெள்ளி, திங்கள் கிழமைகளில் மட்டும் நடைபெற்றுவரும் இக்கொடுப்பனவுகளை கிராம சேவையாளர் பிரிவு அடிப்படையிலேயே தொடர்ந்து வழங்குவதற்கு வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் நெருக்கடி மிகுந்த இக் கால கட்டத்தில் எத்தனையோ இடர்களுக்கிடையில் எம்மால் முடிந்துள்ள சேவையை திட்டமிட்டு வழங்கி வருகின்றோம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-10)

## வாழும்பொழுதே தன் அநுபவங்களை கலைஞன் நூல்வடிவில் தரவேண்டும்

### 'மிருதங்க சங்கீத சாஸ்திரம்' நூல் வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 17

ஒரு கலைஞன் சமுதாயத்துக்கு தேவையான பல அனுபவங்களை தன்னகத்தே வைத்திருக்கிறான். அக்கலைஞன் அழியும் போது அவனது அனுபவங்களும் அவனுடன் சென்றுவிடுகின்றன; ஆனால் கலைஞன் வாழும் போதே தன் அனுபவங்களை நூல் வடிவில் சமுதாயத்துக்கு தந்தால் சமுதாயத்துக்கு பலன் கிடைக்கும்:

இப்படிக் கூறினார் யாழ். பல்கலைக்கழக உப - வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா.

இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் திங்கட்கிழமை நடந்த மிருதங்க வித்துவான் அ. நா. சோமஸ்கந்தசர்மாவின் 'மிருதங்க சங்கீத சாஸ்திரம்' எனும் நூலின் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் அவர் மேற் கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடந்த இவ் வைபவத்தை இராமநாதன் நுண்கலைக் கழக இசை விரிவுரையாளர் திருமதி ஜெகதாம்பிகை கிருஷ்ணந்தசிவம், நடன விரிவுரையாளர் திருமதி கிரிசாந்தி ரவீந்திர ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்:

இராமநாதன் நுண்கலைக் கழக இசை விரிவுரையாளர் திரு. ஏ. கே. கருணாகரன் ஆரம்ப உரை நிகழ்த்தினார்.

உபவேந்தர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சங்கீதம், நாட்டியம், மிருதங்கம் போன்ற கலைகளை வளர்க்கவும், மக்களின் கலாசாரத்தை வளர்க்கவும் யாழ். பல்கலைக்கழகம் இந் நிறுவனத்தை அமைத்துள்ளது:

இங்கு கல்வி போதிக்கும் கலைஞர்கள் தம் அனுபவங்கள் சமுதாயத்துக்கு பயன் பெறும் வகையில் நூல்களை வெளியிட வேண்டும். ஆராய்ச்சி மேற் கொள்ள வேண்டும். இவற்றுக்கு பல்கலைக் கழகம் பூரண ஆதரவு நல்கும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் பேசுகையில் எம் பாரம்பரிய கலாசாரத்தை வளர்ப்பதில் கலைகள் முன் நிற்கின்றன. அக் கலை வளர்ச்சிக்காக நிறுவப்பட்டுள்ள இந் நுண்கலைத்துறை வளர்க்கப்பட வேண்டியதவசியம். இத்துறையைச் சார்ந்தவர் தம் துறைகளுடன் இணைந்துள்ள பாடங்களில் ஆய்வுகள் செய்யவேண்டும். எம் சங்கீதக்கலையின் வரலாறு சிறப்பு ஆகியன குறித்தும், வளர்ந்து வரும் மேலை நாட்டுக் கலைகளுடன் எம் கலைக்கு உள்ள தொடர்பு; வேறுபாடு போன்றவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மேல்படிப்புக்கு பல்கலைக்கழகம் இவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி பு. கோபாலகிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது.

இந் நுண்கலைப்பீடம் ஆரம்பிக்கப்பட்டு முப்பது ஆண்டு காலத்தில் இன்றுதான் சங்கீத ஆய்வு நூல் ஒன்று வெளிவந்துள்ளது. கழகத்துக்கும், மக்களுக்கும் கலைப் பொக்கிஷமாக வந்துள்ள இந் நூல் போன்று மேலும் நூல்கள் வெளிவர வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் வி. சிவசாமி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் எம். என். செல்லத்துரை உட்படப் பலர் உரையாற்றினர்கள். ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் பிரமஸ்ரீ ந. வீரமணிஐயர், ஆய்வுரை நிகழ்த்தினார் நூலாசிரியர் அ. நா. சோமஸ்கந்த சர்மா பதிலுரையாற்றினார். (இ 3 90)

## இடப்பெயர்வு

வல்வெட்டித்துறை, ஆக. 17

பொலிகண்டிப் பகுதியில் அடிக்கடி அசம்பாவிதங்கள் நிகழ்வதால் அப்பகுதி மீனவ மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்:

இவர்கள் ஆலயங்களிலும், இன்பருட்டிப் பகுதி வீடுகளிலும், கப்பூரடம் பகுதியிலும தஞ்சம புகுந்துள்ளனர்:

இதே வேளை தாளையடி, மருதங்கேணிப் பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இடம்பெயர்ந்து விட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்தே மக்கள் பீதியுற்று இடம்பெயர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது; (ஒ-160-144



## W. M. மெண்டிஸ் அன் கோ லிமிட்டெட்

### புதிய விலை விபரம்

04 - 08 - 89 தொடக்கம் யாழ்மாவட்டத்தில் எமது உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலை வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| | மெண்டிஸ் | எக்ஸ்ரா ஸ்பெஷல் | போத்தல் | 123. 00 |
| | ,, | ஸ்பெஷல் | ,, | 106. 00 |
| | ,, | ஸ்பெஷல் | ½ | 56. 75 |
| | ,, | ஸ்பெஷல் | ¼ | 31. 75 |
| ✶ ✶ | மெண்டிஸ் | கோல்ட் லேபல் | போததல் | 92. 00 |
| | ,, | கோல்ட் லேபல் | ½ | 52. 25 |
| | ,, | கோல்ட் லேபல் | ¼ | 30. 75 |
| ✶ ✶ | மெண்டிஸ் | றெட் லேபல் | போத்தல் | 74 00 |
| | ,, | றெட் லேபல் | ½ | 42. 50 |
| | ,, | றெட் லேபல் | ¼ | 26. 50 |
| ✶ ✶ | மெண்டிஸ் | வெட் 88 | போத்தல் | 81. 00 |
| | ,, | வெட் 88 | ½ | 47. 50 |
| | ,, | வெட் 88 | ¼ | 28. 00 |
| | மெண்டிஸ் | பிரண்டி | போத்தல் | 173. 00 |
| | ,, | பிரண்டி | ¼ | 48. 00 |
| | மெண்டிஸ் | ஜின் | போத்தல் | 143. 00 |
| | ,, | ஜின் | ¼ | 40. 50 |
| | மெண்டிஸ் | றம் | போத்தல் | 143. 00 |
| | மெண்டிஸ் | வொட்கா | போத்தல் | 148. 00 |
| | ரொசாவின் | கோப்பி பானம் | ½ போத்தல் | [illegible]5. 00 |

✶ ✶ இவற்றைக் கொள்வனவு செய்யும்போது வெற்றுப் போத்தல் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது 6/- அறவிடப்படும்.

யாழ் ஏக விநியோகஸ்தர்கள்:-

"வாமாஸ்"

121;2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(A) 2502



## ஆறுண்டு நினைவஞ்சலி



உதயம்;
20 - 06 - 1909

அஸ்தமனம்:
17 - 08 - 1983

### திரு. நாகமணி பூலோகசுந்தரம்

குடும்பத்தின் மூத்தவரே
குலமகனாய் ஒளிர்ந்தவரே
வேகுதையா உள்ளம்
வெந்துருகி சாகுதையா
கள்ளமில்லா மனதாலே
எம்மை மகிழ்வித்தவரே
நிலையில்லா இல் வாழ்வு பொய்யென்றும்
எல்லாம் என்றோ முடிந்த காரியமென்றும்
எண்ணி எங்களைவிட்டுப்
பிரிந்தீர்களோ அப்பா!

நீங்கள் மறைந்த ஆறுண்டுகள் உங்கள் பாசமுள்ள நினைவுகள் எங்களை விட்டகலாதப்பா? உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் எங்கள் பிரார்த்தனைகள்;

அன்பு மனைவி. மக்கள், மருமகன்,
மருமகன், பேரப்பிள்ளைகள்:

27/3. பசல் லேன்,
வெள்ளவத்தை.
(1602)

''ராஜபதி''
தும்பளை ரோட்,
பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் அறிமுகம்!

CHILTON TRIP SWITCH

மின்பொறியியலில் புகழ் மிக்க

OTTERMILL CHILTON LTD

ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

# சுந்தர்சன்

சந்தை முன், மானிப்பாய். (C/3131)


## பிறந்த நாள் வாழ்த்து

17-08-1989



### இவோன் நர்மதா - தர்மதாஸ்

உதயகிரி புனித செபஸ்தியார் வீதி மன்னாரை சேர்ந்த தர்மதாஸ் - இந்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வி இவோன் நர்மதா இன்று 17-08-1989 தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

நர்மதாவை எல்லா வளங்களும் ஒருங்கே பெற்று வாழ பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள் வாழ்த்துகிறார்கள். (1522)


# புரோட்டீன் நிறைந்த புரோட்டினெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது!

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# யாழ்நகரிலுள்ள 3 பிரதான வீதிகளை விரைவில் திருத்த நடவடிக்கை

## மொத்தம் 20 வீதிகளை சீர்செய்யத் திட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 17

யாழ் மாநகர எல்லைக்குள் இருக்கும் மூன்று முக்கிய வீதிகளை வெகு விரைவில் திருத்த யாழ் மாநகரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ். மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரியின் பின்புறம்), கண்டி வீதி-பிரதான வீதியை இணைக்கும் புங்கன்குளம் வீதி, கஸ்தூரியார் வீதியில் வின்சர் சந்திப் பகுதி ஆகியன வே திருத்தப்படவுள்ள வீதிகளாகும்.

இதுபற்றி யாழ். மாநகர சபையின் வேலைப் பகுதிப் பொறியியலாளர் தகவல் தருகையில், யாழ். மாநகர எல்லைக்குள் 20க்கு மேற்பட்ட வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. திருத்தப்பட்டும் வருகின்றன. ஆனால் எமக்கு இயந்திர வசதிகள் - குறிப்பாக றோலர்கள், டிராக்டர்கள் என்பன போதுமான அளவில் இல்லை. எனவே தற்போது வீதிகளில் அதிக சேதமான பகுதிகளை முதலில் திருத்தும் பணிகளை மேற்கொண்டுள்ளோம். ஆனால் பிரஸ்தாப மூன்று வீதிகளும் போக்குவரத்து நெரிசலான பகுதிகள். எனவே இந்த வீதிகளை ஒரே முறையிலேயே முழுவதுமாக திருத்த உள்ளோம். தொடர்ந்து ஏனைய வீதிகளையும் முழுவதுமாக திருத்துவோம் என்றார். (இ-9)

# வெகுஜன தொடர்பு நிலையங்களில் பெரும் வேலை நிறுத்த முஸ்தீபு

கொழும்பு, ஆக 17

இ போ ச பஸ் ஊழியர்களின் வேலைநிறுத்தத்தைப் போன்று அரசாங்கத்தின் பிரதான வெகுஜனத் தொடர்பு சாதனங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சிசேவை, ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கான பூர்வாங்க ஒழுங்குகளை ஜே வி பி இப்போது செய்துவருகிறது என்று கூறப்படுகிறது.

இந்நிறுவனங்கள் இராணுவத்தின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டதற்குப் பதிலடியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

'போர்முரசு' அதாவது 'ரணஹண்ட' என்ற ஜே வி பியின் ஒலிபரப்புச் சேவையில் இந்நான்கு நிறுவனங்களின் ஊழியர்கள் வேலைநிறுத்தத்துக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று கடந்தவியாழக்கிழமை ஜே வி பி எச்சரிக்கை செய்துள்ளது.

வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கவேண்டிய திகதியை ஜே வி பி இன்னும் அறிவிக்கவில்லை.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி ஆகியவற்றின் பல சிரேஷ்ட ஊழியர்கள் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதற்கான கடிதங்களை சமர்ப்பித்தபோதிலும் நிர்வாகத்தினர் கடந்தவாரம் அந்த ராஜினாமாக்களை ஏற்றுக்கொள்ளாதமை குறிப்பிடத்தக்கது. (இ.5)

## திடீரென வந்த மின்சாரத்தால்...

யாழ்ப்பாணம்: ஆக 16

மின்சார விநியோகமில்லை என்பதை உத்தேசித்து, மின்சாரக் கம்பி மீது பிடித்தவர் திடீரென வந்த மின்சாரம் தாக்கி படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் எழுதுமட்டுவாளில் செவ்வாய் நடைபெற்றது. மின்சாரம் தாக்கிக் காயமடைந்தவர் பி. ஜெயச்சந்திரன் [வயது 20] என்பவராவர். இவருக்குப் பலத்த எரிகாயம் ஏற்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் எழுதுமட்டுவாள் ரயில்வே கடவைக்குச் சமீபமாக உள்ள மின்கோபுரம் ஒன்றில் ஏறினாராம். மின்சாரக் கம்பி மீது கையை வைத்து தொங்க முயற்சி செய்த சமயம் திடீரென பாய்ந்த மின்சாரம் அவரைத் தாக்கியதாகக் கருதப்படுகிறது. (அ-9)

## ஒரு மாதத்தில் 52 மாணவர் கைது

கொழும்பு, ஆக 17

கடந்த ஒருமாத காலத்தில் கடந்த ஜூலை 12 ஆம் திகதிக்கு பின்னர் 52 பல்கலைக்கழக மாணவர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர். (ஒ-எ)

# இஸ்ரவேல் யுத்த ஆலோசகர் இலங்கையில் தற்போது இல்லை

## நாடாளுமன்றத்தில் ரஞ்சன்

கொழும்பு, ஆக: 15

இஸ்ரவேலிய யுத்த ஆலோசகர்கள் இலங்கையில் தற்போது இல்லை என்று வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நாடாளு மன்றத்தில் சொன்னார்.

அம்பாந்தோட்டை சுதந்திரக் கட்சி எம்.பி மஹிந்த ராஜபக்ஷவின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் விஜேரத்ன "அப்படியான இஸ்ரவேலிய யுத்த நிபுணர்கள் இலங்கையினால் வரவழைக்கப்படவில்லை என்றும் சொன்னார். [த-எ]

# தொழிலாளர் சங்கம் முதலாளிகளுக்கு எதிரானதல்ல!

## வர்த்தக ஊழியர் சங்க கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம் ஆக. 16

'தொழிலாளர் சங்கம் முதலாளிமாருக்கு எதிரானதல்ல, தொழிலாளர் தங்கள் பிரச்சினைகளை சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்ளலாம். இவை எங்களுக்கு முரண்பாடாக ஏற்படும் பட்சத்தில் ஊழியர் சங்கத்தினூடாக ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் மூலம் எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியும்''

சுன்னாகம் வர்த்தக ஊழியர் சங்க பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய நிர்வாகசபை உறுப்பினர் திரு. த. தில்லையம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டதுடன் தொழிலாளர்களின் கொடுப்பனவுகளாக பின்வருபவை இருக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சனிக்கிழமை அரைநாளும், ஞாயிறு, போயா, மற்றும் வர்த்தகவிடுமுறை தினங்களும் விடுமுறை தினங்களாக அங்கீகரிக்கப்படல்.

ஊழியர்க்கு 8 மணி நேர வேலை.

சேமலாபநிதி, தொழிலாளர் நம்பிக்கைநிதி, விபத்து நிதி, போனஸ்

ஆண், பெண் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 1500.

இந்தத் தீர்மானங்கள்பற்றி ஈழத் தொழிற்சங்கப் பிரதிநிதி திரு. ஏ. பி. ரகுவுடன் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் மறைந்த தலைவர்களான அ. அமிர்தலிங்கம், வெ யோகேஸ்வரன் ஆகியோருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (த)

## ஜனாதிபதியின் அனுமதியின்றி

# மாகாண முதலமைச்சர்கள் வெளிநாடு செல்ல முடியாது

ஜனாதிபதியின் அனுமதி இன்றி மாகாண முதலமைச்சர்கள் வெளிநாடு செல்ல முடியாது: வெளிநாடுகளில் பேச்சுக்களை நடத்தவும் முடியாது.

வெளியுறவு [illegible] சன் விஜேரத்தின இத்தகவலை கொழும்பில் வெளியிட்டார்.

அனுமதி பெறாமல் வெளிநாடு செல்லும் முதலமைச்சர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது பற்றி [illegible] சொன்னார். (த-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மூன்று கோடி ரூபா செலவில்

# யாழ் தலைமைத் தபாலகம் அமைப்பதற்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணத்தில் மூன்று கோடி ரூபா செலவில் புதிய தபாலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என தபால் மா அதிபர் தெரிவித்த ஆலோசனைக்கு தபால் தந்தி அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த நான்காம் திகதியிடப்பட்ட கடிதம் வடமாகாண தபால் அத்தியட்சகருக்கு தபால் திணைக்கள அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடமாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்திருக்கும் தற்போதைய தபாலகக் கட்டடத்தை முற்றாக அகற்றிவிட்டு அந்த இடத்திலேயே புதிய தபால் அலுவலகத்தை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய தபால் நிலையக்கட்டடம் மூன்று மாடிகளைக் கொண்டதாக அமையும். பிராந்திய தபால் தரம் பிரிக்கும் அலுவலகம், பிராந்திய கணக்காளர் அலுவலகம், வடமாகாண தபால் அத்தியட்சகர் அலுவலகம், தபால் அதிபர்கள், மற்றும் அத்தியட்சகர்கள் ஆகியோருக்கான விடுதிகள் ஆகியவை இந்தக் கட்டடத்திலேயே அமையவுள்ளன.

பற்றைகளால் மூடப்பட்டிருக்கும் பழைய தபாலக பகுதிகளில் பற்றைகளை அகற்றி துப்புரவு செய்யும் வேலைகள் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-10)


# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்:

A/L 91 புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன

| | |
|---|---|
| பொருளியல் | - குமாரவேல் |
| வர்த்தகம் | - தேவா |
| கணக்கியல் | - ஸ்ரீ |
| அளவையியல் | - சயந்தன் |
| தமிழ் | - குழந்தை |
| புவியியல் | - குணராசா |
| அரசியல் | - குமார் |
| இந்துநாகரிகம் / இந்திய வரலாறு | - அருள்நங்கை |

SPOKEN ENGLISH

BRITTO புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன.

(3296)



உ




# ஸ்ரீவரலக்ஷ்மி விரதம்

## நோன்புக் கயிறும், குங்குமப் பிரசாதமும்

ஸ்ரீசாஸ்தாபீட மாதரணியினரின் ஏற்பாட்டில்,

✱ ஸ்ரீ வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு

கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் அருளாசியுடன்

✱ "ஸ்ரீ சாஸ்தாபீடத்தில் - பீடாதிபதி"

## கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் குருஸ்வாமி

தலைமையில்

சௌபாக்ய லக்ஷ்மீ ஹோமம் 11-08-89 வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கணவரின் நீண்ட ஆயுள் வேண்டி சுமங்கலிகளுக்கு மங்கள மஞ்சள் நிற நோன்புக் கயிறும், விரைவில் திருமணம் நடைபெற வேண்டி கன்னிப்பெண்களுக்கு மங்கள சிகப்புநிற நோன்புக்கயிறும், வியாபார அபிவிருத்தி, லக்ஷ்மீ கடாக்ஷம், வேண்டி ஆண்களுக்கு சுவாமி ஐயப்பன் காவல்நூலும், ஐயப்பன் அபிஷேக விபூதி, ஸ்ரீ வரலட்சுமி விரத அர்ச்சனைக் குங்குமம் ஆகியன சகல அடியார்களுக்கும் வழங்கப்படுகின்றன. தேவைப்படுவோர் ஸ்ரீசாஸ்தாபீடத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

✱ நோன்புக்கயிறு பெறுவதற்கு எதுவித கட்டணமும் இல்லை அன்பர்கள் மனமுவந்து வழங்கும் காணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| திருமதி சரோஜா பெரியசாமி | திருமதி கல்யாணி செல்லப்பா |
| [மாதரணிப் பொதுச் செயலாளர்] | [மாதரணித் தலைவி] |

கடிதங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

"செல்வி ஸ்ரீ வரலக்ஷ்மீ ஐயப்பதாஸன்"

சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்

120, பிக்கறிங்ஸ் றேட், கொழும்பு - 13.

**Miss. Sri Varalaxmi Iyappathasan**

SABARIMALAI SRI SASTHA PEEDAM

120, Pickerings Road, Colombo - 13. (G/3503)

# வடக்கு-கிழக்கு மாகாண அரசு பதவி வெற்றிடங்கள்

## வடக்கு - கிழக்கு மாகாண தட்டெழுத்தாளர் சேவையின் (தமிழ்) ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை — 1989

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் தட்டெழுத்தாளர் சேவையில் சேர விரும்பும் இருபாலாருக்குமான போட்டிப் பரீட்சையொன்று பின்வரும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளது:-

**திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கல்முனை, வவுனியா.**

பரீட்சார்த்திகள் ஏதேனும் மூன்று பரீட்சை நிலையங்களை முன் விருப்ப அடிப்படையில் தெரிவு செய்யலாம்.
போதியளவு பரீட்சார்த்திகள் இல்லா ஏதேனும் பரீட்சை நிலையம் தள்ளுபடி செய்யப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

2. தகுதி:- இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள்
   (அ) இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.
   (ஆ) பரீட்சார்த்திகள் 18 வயதிற்கு குறையாதவர்களாயும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
   (இ) நற்குணமுடையவராக இருத்தல் வேண்டும்;
   (ஈ) வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். அல்லது கடைசி விண்ணப்ப தேதிக்கு முந்திய 6 வருட கால எல்லைக்குள் 3 வருடங்கள் தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வதிந்திருத்தல் வேண்டும்; அல்லது தொடர்ச்சியான 5 வருடங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடுத்தரக் கல்வி பெற்றிருக்க வேண்டும். பரீட்சார்த்தியின் பெற்றோர்களில் எவராவது இடமாற்றத்திற்கு அடங்கிய அரச சேவையிலோ, உள்ளூராட்சி சேவையிலோ, கூட்டுத்தாபனங்களிலோ கடமையாற்றுபவராக அல்லது கடமையாற்றியவராக இருப்பின், அப்பெற்றோர் எவராவது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிறந்திருப்பின் குறிப்பிட்ட பரீட்சார்த்தி தகுதி பெறுபவர் ஆவார்.
   (உ) பின்வரும் தராதரங்களில் ஒன்றையாவது உடையவராயிருத்தல் வேண்டும்.
      1) சிரேட்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியம் ஒரு பாடமாகக் கொண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;
      2) பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தர)ப் பரீட்சையில் தமிழ் மொழி பாடத்திட்டம் (அ அல்லது ஆ) அல்லது தமிழ் இலக்கியத்துடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)
      3) பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தர)ப் பரீட்சையில் தமிழ் மொழி பாடத்திட்டம் (அ அல்லது ஆ) அல்லது தமிழ் இலக்கியத்துடன் மேலும் இரண்டு பாடங்களில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரு வருட தமிழ் தட்டெழுத்து அனுபவம் கொண்ட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்;
      4) தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் தமிழை முதல் அல்லது இரண்டாம் மொழியாகக் கொண்டு ஆறு பாடங்களில் ஏ அல்லது பி அல்லது சி தராதரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   (ஊ) சிறந்த உடல் நலம் உள்ளவராக இருத்தல் வேண்டும்;

3. வேதனத்திட்டம்:- ரூபா 17,280 — 14 X 480 — 6 X 600 — 27,600

4. விண்ணப்பம்:-
   i). இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த விளம்பரத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய முழுத்தாளின் அரைத்தாளில் விண்ணப்பதாரர்களினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
   ii). விண்ணப்பங்கள் செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு. திருகோணமலை என்ற முகவரியிடப்பட்டு 08 - 09 - 1989 ஆம் திகதியோ அதற்கு முன்னரோ செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாகப்பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்; இத்திகதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாகாண தமிழ் தட்டெழுத்தாளர் சேவை பரீட்சை" என தெளிவாக எழுதப்படல் வேண்டும்;
   iii). பரீட்சார்த்திகள் 40 ரூபா பெறுமதியான பரீட்சைக் கட்டணத்தை காசுக் கட்டளை மூலமாக அனுப்புதல் வேண்டும்.
   காசுக் கட்டளையை "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு திருகோணமலை" என பெறுதல் வேண்டும்.
   iv). விண்ணப்பங்கள் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படலாகாது.
   v). பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வருவோருள் யாரேனும் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும்.
      (அ) சமாதான நீதிவான்
      (ஆ) சத்திய பிரமாண ஆணையாளர்
      (இ) வழக்கறிஞர்
      (ஈ) பிரசித்த நொத்தாரிசு
      (உ) அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையின் அதிபர்
      (ஊ) கடற்படையை அல்லது வான் படையை அல்லது தரைப்படையைச் சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர்
      (எ) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிப்பவரும் ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறுபவருமான அரசாங்க உத்தியோகத்தர்
      (ஏ) பொலிசு சேவை கசற் நிரல் உத்தியோகத்தர்
      (ஐ) வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள சமயக்குரு

5. பரீட்சைத் திட்டம்:- இரண்டு பாகமாக இப்பரீட்சை நடாத்தப்படும். அவை
   பாகம் 1 எழுத்துப் பரீட்சை (விபரங்கள் பின்னர் பிரசுரிக்கப்படும்)
   பாகம் 11 வாய்மொழிப் பரீட்சை

6. ஏற்கனவே தமிழ் தட்டெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி இருப்பவர்கள் அனைவரும் இவ்விளம்பரத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தில் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

35, மக்கேசர் வீதி,
உவர்மலை, திருகோணமலை.
11 - 08 - 1989

சுட்டிலக்கம்:-

## மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் தட்டெழுத்தாளர் சேவையில் (11) ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை**

குறிப்பு:- (இப்படிவம் பரீட்சார்த்தியினால் செம்மையாகவும் தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.)

1. 1:1 முதலெழுத்துக்களுடன் பெயர்:—
   1:2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் அல்லது பெயர்கள்:—
   1:3 பால்:—
   1:4 விவாகம் செய்தவரா / செய்யாதவரா:—
   1:5 தேசிய இனம்:—
2. முகவரி:—
   மாவட்டம்:—
3. விளம்பரத்தின் பகுதி 2 (ஈ) இன் பிரகாரம்
   பரீட்சார்த்தியின் பிறப்பு பெற்றோரின் வதிவிடம் பற்றிய விபரம்:—
4. பரீட்சார்த்தி விரும்பும் பரீட்சை நிலையங்கள்:—
   4:1 1 ஆம் தெரிவு:—
   4:2 2 ஆம் தெரிவு:—
   4:3 3 ஆம் தெரிவு:—
5. 5:1 பிறந்த திகதி:—
   5:2 1989. 09. 08 இல் வயது:
   வருடம் ......... மாதம் ......... நாட்கள் .........
6. கல்வித் தகைமைகள்:—
   6:1 விளம்பரத்தின் பகுதி 2 (உ) (3) ஆம் பந்தியின் படி தகுதிபெறுபவராயின் அனுபவச் சான்றிதழ்கள் பற்றிய விபரம் தருக:—
   6:2 பரீட்சையின் பெயர்:—
   6:3 பாடங்கள்:—

| பாடங்கள் | சித்தியடைந்த வருடம் | பரீட்சை நிலையமும் சுட்டிலக்கமும் |
|---|---|---|
| ............ | ..................... | ................... |

   6:4 உயர் கல்வித் தகைமைகள்:-
      1. பரீட்சையின் பெயர் :-
      2. வருடம் :-
      3. சுட்டிலக்கம் :-
      4. பாடங்கள் :-
7. எப்போதாவது எக்குற்றத்திற்காகவேனும் நீர் குற்றத் தீர்ப்புப் பெற்றுள்ளீரா? அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? அல்லது உமக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறயின் திகதி, தவறின் தன்மை, நீதிமன்றத்தின் பெயர், வழக்கு இலக்கம் என்பனவற்றைக் கூறுக:-
8. நான் தந்துள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு சரியானவையும் உண்மையானவையும் என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.
9. 40/- ரூபா பெறுமதியுள்ள காசுக்கட்டளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
   காசுக்கட்டளையின் இலக்கம் :-...............
   காசுக்கட்டளை பெறப்பட்ட தபாற் கந்தோர் பெயர் :-...............
   திகதி :-...............

.......................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்

10. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :-
   நான் திரு / திருவாட்டி / செல்வி...........என்பவர் தற்போது ................ இல் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார் என்றும் .............. இல் தற்போது வதிகிறார் என்றும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் என்றும் அவர் இவ்விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை .............. ஆம் ஆண்டு ......... மாதம் ......... ஆந் திகதி என்முன்னிலையில் இட்டாரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.......................................
பரீட்சார்த்தியின் கையொப்பத்தை
அத்தாட்சிப் படுத்துபவரின் கையொப்பம்

பெயர் :-.........
முகவரி :-.........
நிலை :-.........
திகதி :-.........

(சி/3223)

### நூல்நிலையம்

மாங்குளம், ஆக 17
தண்ணீரூற்று வை. எம். சி. ஏ. நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக இருந்து அமரத்துவம் அடைந்த அமரர் பாலகிருஷ்ணன் நினைவாக அப்பகுதியில் ஓர் நூல் நிலையத்தை ஆரம்பித்துள்ளனர்.
சகல விதமான நூல்களும் உடைய இந் நூலகத்திற்கு முள்ளியவளை நூலகப் பொறுப்பாளர் திரு. யோசப் ஆலோசனைகளை வழங்கி வருகிறார். (க-94)

### முல்லைத்தீவில்


மாங்குளம், ஆக 17
முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டியில் முல்லைத்தீவு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் சகல விளையாட்டுப்போட்டிகளிலும் பங்கு கொண்டனர்.
இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்ட வீரர்களை கௌரவிக்கு முகமாக இளைஞர் முன்னேற்றமன்றம் தேனீர் விருந்துபசாரம் ஒன்றை நடத்தியது.
திரு. யேசுராசா அதில் தலைமை வகித்து உரை நிகழ்த்தினர். (க-94)

### சமாசக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 17
பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான வேலைத் திட்டங்கள் பற்றி ஆராய்வதற்காக நல்லூர் சனசமூக நிலையங்களின் சமாசம் விஷேட கூட்டம் ஒன்றை எதிர்வரும் 20 ஆம் திகதி திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடத்துகிறது.
சமாசத்தின் தலைவர் திரு. வி. செல்வராசா தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் பதிக்கப்பட்ட சனசமூக நிலையங்களின் புனர்வாழ்வு, நன்கொடை ஆகியன பற்றி ஆராயப்படவிருக்கிறது. (த - 3)

### பதில் கடமை

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக பதில் கடமை புரிந்த வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாச்சர சண்முகதாஸ் யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய உதவி அரசங்க அதிபராக பணி புரிவதுடன் வேலணை உதவி அரசாங்க அதிபராகவும் இருப்பார்.
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சிவரத்தினம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராகவும் பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். (க - 111)



### இடமாற்றம்

நெடுந்தீவு, ஆக 17
நெடுந்தீவு பிரதேசசபையின் பிரதம எழுதுவினைஞர் திரு. நா சோதிலிங்கம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் தொடக்கம் தெல்லிப்பளை பிரதேசசபைக்கும் தெல்லிப்பளையில் கடமையாற்றும் திரு எஸ் சேவியர் நெடுந்தீவு பிரதேசசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (க-111)

★

மாங்குளம், ஆக 17
முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து திரு. ஜீவகாரணியம் திருகோணமலை வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்துக்கும்
இவ்வலுவலகத்திலிருந்து திரு. எஸ். சந்திரசேகரம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக யாழ் அபிவிருத்தி அலுவலகத்திற்கும்—
திரு. ரி. சபாரத்தினம் பதில் கூட்டுறவு உதவி ஆணையாளராக யாழ். தெ. ப. பொருள் அபிவிருத்தி அலுவலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (இ-94)

★

மாங்குளம் பொலீஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி திரு. குகதாஸ் ஒட்டுசுட்டான் பொலீஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ச-94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண அரசு பதவி வெற்றிடங்கள்

## வடக்கு - கிழக்கு மாகாண [தமிழ்] சுருக்கெழுத்தாளர் சேவையின் IIஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை — 1989

வடக்கு - கிழக்கு மாகாண சுருக்கெழுத்தாளர் சேவையின் II ஆம் தரத்திற்கு சேரவிரும்பும் இருபாலாருக்குமான போட்டிப் பரீட்சையொன்று பின்வரும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளது.

**திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கல்முனை, வவுனியா.**

பரீட்சார்த்திகள் ஏதேனும் மூன்று பரீட்சை நிலையங்களை முன்விருப்ப அடிப்படையில் தெரிவு செய்யலாம்.
போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத ஏதேனும் பரீட்சை நிலையம் தள்ளுபடி செய்யப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

2. தகுதி:- இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள்
   (அ) இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.
   (ஆ) பரீட்சார்த்திகள் 18 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்;
   (இ) நற்குணமுடையவராக இருத்தல் வேண்டும்.
   (ஈ) வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். அல்லது கடைசி விண்ணப்பத்தேதிக்கு முந்திய 6 வருட கால எல்லைக்குள் 3 வருடங்கள் தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வதிந்திருத்தல் வேண்டும். அல்லது தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடுத்தரக் கல்வி பெற்றிருக்க வேண்டும்; பரீட்சார்த்தியின் பெற்றோர்களில் எவராவது இடமாற்றத்திற்கு அடங்கிய அரச சேவையிலோ, உள்ளூராட்சி சேவையிலோ, கூட்டுத்தாபனங்களிலோ கடமையாற்றுபவராக அல்லது கடமையாற்றியவராக இருப்பின், அப்பெற்றோர் எவராவது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பிறந்திருப்பின் குறிப்பிட்ட பரீட்சார்த்தி தகுதி பெறுபவர் ஆவார்;
   (உ) பின்வரும் தராதரங்களில் ஒன்றையாவது உடையவராயிருத்தல் வேண்டும்.
      1. சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் பாடத்திட்டம் (அ அல்லது ஆ) தமிழ்மொழி அல்லது தமிழ் இலக்கியத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
      2. பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரணதர)ப் பரீட்சையில் பாடத்திட்டம் (அ அல்லது ஆ) தமிழ்மொழி அல்லது தமிழ் இலக்கியம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;
      (ஒரே தடவையில் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்)
      3. பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரணதர)ப் பரீட்சையில் தமிழ்மொழி பாடத்திட்டம் (அ அல்லது ஆ) அல்லது, தமிழ் இலக்கியம், உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருவருட தமிழ் சுருக்கெழுத்து அனுபவம் கொண்ட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
      4. தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் தமிழ்மொழி உட்பட இரண்டாம் மொழியில் ஏ அல்லது பி அல்லது சி தராதரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
      5. பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட (வர்த்தகவியல்) சான்றிதழ்.
      6. உயர்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொழில்நுட்ப கல்லூரிகளால் வழங்கப்பட்ட வர்த்தகக்கல்வி தேசிய சான்றிதழ், அல்லது சுருக்கெழுத்தாளர் சான்றிதழ்;
   (ஊ) சிறந்த உடல் நலம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

3. வேதனத்திட்டம்:
   ரூபா 19,680 — 9 × 480 — 8 × 600 — 28,800

4. விண்ணப்பங்கள்:
   i) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த விளம்பரத்தில் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய முழுத்தாளின் அரைத்தாளில் விண்ணப்பதாரர்களினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
   ii) விண்ணப்பங்கள் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு திருகோணமலை என்ற முகவரியிடப்பட்டு 8 — 09 — 1989 ஆம் திகதியோ அதற்கு முன்னரோ பரீட்சை செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்ப மெதுவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாகாண தமிழ் சுருக்கெழுத்தாளர் சேவை பரீட்சை" என தெளிவாக எழுதப்படல் வேண்டும்.
   iii) பரீட்சார்த்திகள் 40 ரூபா பெறுமதியான பரீட்சைக் கட்டணத்தை காசுக் கட்டளை மூலமாக அனுப்புதல் வேண்டும்;
   காசுக்கட்டளையை "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு திருகோணமலை என பெறுதல் வேண்டும்.
   iv) விண்ணப்பங்கள் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படலாகாது.
   v) பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வருவோருள் யாரேனும் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.
      (அ) சமாதான நீதிவான்
      (ஆ) சத்தியப்பிரமாண ஆணையாளர்
      (இ) வழக்கறிஞர்
      (ஈ) பிரசித்த நொத்தாரிசு
      (உ) அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையின் அதிபர்
      (ஊ) கடற்படையை அல்லது வான்படையை அல்லது தரைபடையை சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர்.
      (எ) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிப்பவரும் ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறுபவருமான அரசாங்க உத்தியோகத்தர்.
      (ஏ) பொலீஸ் சேவை கசற் நிரல் உத்தியோகத்தர்
      (ஐ) வழிபாட்டுத் தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள சமயக்குரு

5. பரீட்சைத் திட்டம்:- இரண்டு பாகமாக இப்பரீட்சை நடாத்தப்படும்; அவை:
   1 எழுத்துப் பரீட்சை (விபரங்கள் பின்னர் பிரசுரிக்கப்படும்)
   11 நேர்முகப் பரீட்சை

6 ஏற்கனவே தமிழ் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி இருப்பவர்கள் அனைவரும் இவ்விளம்பரத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தில் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.

செயலாளர்,
மாகாணசபை பொதுச்சேவை ஆணைக்குழு.
வடக்கு - கிழக்கு மாகாணம்.

35, மக்கேசர் வீதி,
உவர்மலை, திருகோணமலை.
11 - 08 - 1989

---

சுட்டிலக்கம்:-

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் சுருக்கெழுத்தாளர் சேவையின் 11ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை

குறிப்பு:- (இப்படிவம் பரீட்சார்த்தியினால் செம்மையாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.

1. 1 : 1 முதலெழுத்துக்களுடன் பெயர்:—
   1 : 2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் அல்லது பெயர்கள்:—
   1 : 3 பால்:—
   1 : 4 விவாகம் செய்தவரா / செய்யாதவரா:—
   1 : 5 தேசிய இனம்:—
2. முகவரி —
   மாவட்டம்:—
3. விளம்பரத்தின் பகுதி 2(ஈ) இன் பிரகாரம்
   பரீட்சார்த்தியின் பிறப்பு பெற்றோரின் வதிவிடம் பற்றிய விவரம்:—
4. பரீட்சார்த்தி விரும்பும் பரீட்சை நிலையங்கள்—
   4 : 1 1 ஆம் தெரிவு:—
   4 : 2 2 ஆம் தெரிவு:—
   4 : 3 3 ஆம் தெரிவு:—
5. 5 : 1 பிறந்த திகதி:—
   5 : 2 1989 - 09 - 08 இல் வயது
   வருடம் ………… மாதம் ………… நாட்கள் …………
6. கல்வித் தகைமைகள்:—
   6 : 1 விளம்பரத்தின் 2 உ) (3) ஆம் பந்தியின்படி தகுதிபெறுபவராயின், அனுபவச் சான்றிதழ் பற்றிய விபரம் தருக:—
   6 : 2 பரீட்சையின் பெயர்:—
   6 : 3 பாடங்கள்:

| பாடங்கள் | சித்தியடைந்த வருடம் | பரீட்சை நிலையமும் சுட்டிலக்கமும் |
|---|---|---|
| …………… | …… … | …………… |

   6 : 4 உயர் கல்வித் தகைமைகள் :-
      1. பரீட்சையின் பெயர் :-………
      2. வருடம் : ………
      3. சுட்டிலக்கம் :-………
      4. பாடங்கள் :………
7. எப்போதாவது எக்குற்றத்திற்காகவேனும் நீர் குற்றத் தீர்ப்புப் பெற்றுள்ளீரா? அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? அல்லது உமக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் திகதி, தவறின் தன்மை, நீதிமன்றத்தின் பெயர், வழக்கு இலக்கம் என்பனவற்றைக் கூறுக:-
8. நான் தந்துள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு சரியானவையும் உண்மையானவையும் என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.
9. 40/- ரூபா பெறுமதியுள்ள காசுக்கட்டளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
   காசுக்கட்டளையின் இலக்கம் :- ………
   காசு கட்டளை பெறப்பட்ட
   தபாற்கந்தோர் பெயர் :- ………
   திகதி :- ………

…………………………………
பரீட்சார்த்தியின் கையொப்பம்

10. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் ;-
    நான் திரு. / திருவாட்டி / செல்வி …………… என்பவர் தற்போது ………… இல் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார் என்றும் ………… இல் தற்போது வதிகின்றார் என்றும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் என்றும் அவர் இவ்விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை………… ஆம் ஆண்டு ………… மாதம் ……… ஆந் திகதி என் முன்னிலையில் இட்டாரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

…………………………………
பரீட்சார்த்தியின் கையொப்பத்தை
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர் :-
முகவரி :-
பதவி :-
திகதி :-

(சி-3221)

---

## சீனப் பிரதமர் பாக். செல்கிறார்

இஸ்லாமபாத், ஆக. 16
சீனப் பிரதமர் லீபெங் வருகிற நவம்பரில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இஸ்லாமபாத்தில் உள்ள சீனத் தூதர் ரியான் டிங் இதனைத் தெரிவித்தார்.

பங்களாதேஷ் நேபாளம் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தெற்காசிய பயணத்தின் ஒரு கட்டமாகவே சீனப் பிரதமரின் பாகிஸ்தான் விஜயம் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜூனில் சீனாவில் மாணவர் கிளர்ச்சி ஏற்பட்டதல்லவா! அதன் பின்னர் சீனப் பிரதமர் வெளிநாடு செல்லவிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சட்டமா அதிபர்

வெலிங்டன், ஆக. 16
நியூசிலாந்தின் பழைய பிரதமர் டேவிட் லாங்கே சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டார். புதிய திரு.ஜோன்ரி பால்மர் இந்த நியமனத்தை செய்தார்.

கடந்த வாரம் திரு.லாங்கே அமைச்சர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. ( )

## புதிய உப-ஜனாதிபதி

டாக்கா, ஆக 16
பங்களாதேஷ் அரசியலில் பெரியமாற்றங்களை ஜனாதிபதி எர்ஷாத் கடந்த சனிக்கிழமை செய்தார்.

பிரதமரான ஜனாப் மௌதூத் அஹ்மத் புதிய உப ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

துணைப்பிரதமராக இருந்த காஸி சபார் அஹ்மத் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அமெரிக்க அரசமைப்புக்கு இணையானதாக அரசு நிர்வாகத்தை மாற்றி அமைக்கும் ஒரு முயற்சியாக இம் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ)

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

லண்டன் ஆக. 16
தற்போது மியான்மார் என்று அழைக்கப்படும் பர்மா நாட்டில் எதிர்க்கட்சித் தலைவியான அவுஸ்சன்சுகியி தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

இவர் தற்சமயம் பர்மாவின் இராணுவ அரசால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்,

இவரது கணவர் லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் மைக்கல் ஏரிஸ் ஆவர்

இவர் தலைமை வகிக்கும் ஜனநாயக தேசிய அமைப்பின் தொண்டர்களின் பாதுகாப்பை பர்மா அரசு உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. (எ)

## நெல்சன் மண்டேலா விடுதலையாவாரா?

கேப்டவுன் ஆக. 16
கறுப்பு இனத் தலைவர் நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்வது பற்றி வருகிற செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் பின்னர் முடிவுசெய்யப்படும்;

இத்தகவலை தென் ஆபிரிக்காவின் பதில் ஜனாதிபதி எப். டபிள்யூ. கிளர்க் தான் நடத்திய முதலாவது செய்தியாளர் மாட்டில் வெளியிட்டார்.

புதிய தென் ஆபிரிக்கா ஒன்றைக் கட்டி எழுப்பப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

## அவசர வேண்டுகோள்

ஐநா ஆக 16
லெபனான் மோதலை நிறுத்துவது பற்றி முடிவு எடுக்க ஐநா பாதுகாப்புச் சபைஅவசரமாகக் கூட்டப்பட வேண்டும் என்று ஐநா பொதுச் செயலாளர் பெரஸ்டிகுயிலர் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் அறிமுகம்
Chilton Trip Switch
மின்பொறியியலில் புகழ்மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

சுந்தர் சன்
சந்தைமுன், மானிப்பாய்.

உதயன்

17 08 1989 வியாழக்கிழமை

CHILTON
CHILTON
CHILTON
CHILTON
CHILTON

## மரண அறிவித்தல்கள்

### குமாரதாசன் கைலாசசேகரன் (Bobby)

நோர்வேயில் கடமையாற்றியவரும், தற்போது ஐக்கிய நாடுகள்ஸ்தாபனம் சம்பியாவில் கடமையாற்றியவருமாகிய கைலாசசேகரன் சம்பியாவில் அகால மரணமானார். அவர் திரு. திருமதி குமாரதாசனின் அன்பு மகனும், சித்திரலேகா, பாலபாஸ்கரன், பிரபாகரன், திருபாகரன், வசிகரன், சீதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நடராசா, மகேந்திரராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அர்ச்சுனாவின் பிரியமான சித்தப்பாவும் ஆவார். மரணச் சடங்குகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
P. K. C. குமாரதாசன்.

இந்துக் கல்லூரி ஒழுங்கை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
(1621)

### திரு. வீரசிங்கம் சிற்றம்பலம்

திரு. வீரசிங்கம் சிற்றம்பலம் அவர்கள் காலமானார். இவர் காலம்சென்ற வைத்திய கலாநிதி வீரசிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், சரஸ்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும். காலம்சென்ற ஜெயவீரசிங்கம், புனிதவதி, பரமநாதன் (இலங்கை வங்கி, சாவகச்சேரி). சாந்தம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதிப்பிள்ளை, நாகராசா (அபுதாபி). மகேந்திரன் (அமெரிக்கா). ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும். யோகலிங்கம் (இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்), கனகம்மா (ஆசிரியை, மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்), கமலாம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-8-89 (வியாழன்) இன்று மாலை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பரமநாதன் (மகன்)

வீரசிங்கம் வீதி,
மீசாலை.
(1625)

### திரு. P. தணிகாசலம்

(நெல்லியடி மக்கள் வங்கி முகாமையாளர்)

திரு. P. தணிகாசலம் 16-8-89 அன்று காலமானார். இவர் திருமதி பரா. தணிகாசலத்தின் (ஆசிரியை, வதிரி திரு இதயக் கல்லூரி, கரவெட்டி) அன்புக் கணவரும், செல்விகள் தீபா, அனுஷா (பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரி மாணவிகள்), செல்வன் பாபு [ஹாட்லிக் கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. ஜே. எஸ். வேலாயுதத்தின் அன்பு மருமகனும், திருமதி பாக்கியம், திரு. P. வேலாயுதம் (தபால் அதிபர், பளை), திருமதி இராசம்மா (கனடா). காலஞ்சென்ற தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி M. M. அருளையா (கனடா) திரு. மதிபாலசிங்கம் [யார்க்கரு விநாயகர் வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பரா. தணிகாசலம்

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(1624)

### திருமதி சின்னத்துரை இளையாச்சி

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை இளையாச்சி 13-08-1989 அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற குட்டித்தம்பி சின்னத்துரையின் அன்பு மனைவியும். இராஜலட்சுமி விஜயலட்சுமி, சோதிமலர், பூமலர் (லண்டன்), ராணிமலர் (கனடா), அருந்தவராசா, நவமலர், நடராசா (கனடா), நாகேஸ்வரி (பிரான்ஸ்), ஆனந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜரட்ணம், குணசிங்கம், சிவசாமி, கிருஷ்ணசாமி (கனடா), கமலாதேவி, ஜெயரட்ணம் (M.P.C.S., உடுப்பிட்டி), புஸ்பராணி (கனடா), பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), கௌசலா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், குமாரசாமி (சங்கீத ஆசிரியர்), வரதலட்சுமி, ஸ்ரீதரன் (லண்டன்), ஜெயலட்சுமி, நித்தியானந்தலட்சுமி, வரதராசா (பிரான்ஸ்), ஞானலட்சுமி (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராசா (கனடா], ஜீவராசா (லண்டன்). வசிகரன் (கனடா), உமாசுதா, கிருசாந்தி, வாசுகி, சிந்துஜா, ஜெயராம், அபிராமி, ரகுராம், ரவிசங்கர், உதயசங்கர், விஜேத்காந், அஜித்தா, அருணன், ஆரணி ஆகியோரின் பேத்தியும், சுகன்யா, சுரேந்தர், பிரிந்தா, வீணாவாகினி ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரது பூதவுடல் 18-08-1989 வெள்ளிக்கிழமை (ஆவணி 2-ம் திகதி) நாளை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனக்கிரியைகள் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

"மலர் பவனம்".
வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி.
[1626]

---

மஹரகம ஆஸ்பத்திரியில்

## கடிதம் வந்ததும் உடன் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஆக 17

மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் டாக்டர்களும், தாதிகளும், ஏனைய ஊழியர்களுடன் நேற்று முன்தினம் நண்பகலில் இருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து அறியவருவதாவது;—

செவ்வாய் நண்பகல் அளவில் ஆஸ்பத்திரி பிரதான வாசலில் வைத்து இனந்தெரியாதவர்கள் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றனர்.

கொழும்பு ஆஸ்பத்திரி ஊழியர் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக வேலை நிறுத்தம் செய்ய முன்வரவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

உடனே டாக்டர்கள் மற்றும் தாதிகளும் ஏனைய ஊழியர்களுடன் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இப்போது ஆஸ்பத்திரி முற்றாக ஸ்தம்பித்து விட்டது.

மனிதாபிமான ரீதியில் புற்றுநோய் ஆஸ்பத்திரி ஊழியர்களை வேலைக்குத் திரும்ப அனுமதிக்கும்படி. வேலைநிறுத்தம் செய்யும்படி அழைப்பு விட்டவர்களைக் கோருகிறோம் —

பெரும்பாலான நோயாளர் வறியவர்கள். தூரஇடங்களிலிருந்து வந்தவர்கள். அவர்களில் பலர் இறந்துவிடக்கூடிய ஆபத்து உண்டு—என்று ஆஸ்பத்திரிப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (ஓ-எ)

## உள்ளூராட்சி அதிகாரிகள் மாநாடு இன்று

யாழ்ப்பாணம், ஆக. 17

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி அலுவலகங்களினதும் உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று இன்று திருகோணமலையில் நடைபெறுகிறது.

மாகாணசபையினால் இம் மாநாடு கூட்டப்படுகிறது.

உள்ளூராட்சித் திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இம்மாநாட்டில் ஆராயப்படும் எனத் தெரிய வருகிறது. (ஓ-13)

## 21 பாஸ்போர்ட்டுகளுடன் மன்னார் இளைஞர் கைது!

கொழும்பு, ஆக 17

துபாயில் இருந்து தாயகம் திரும்பிய மன்னார் இளைஞர் ஒருவர், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து 21 சிங்கப்பூர் பாஸ்போர்ட்டுகள் மற்றும் 19 ஆயிரம் அமெரிக்க டாலர் பணம் ஆகியவற்றுடன் கைது செய்யப்பட்டார்.

சூட்கேஸின் இரகசிய அறைக்குள் இவை மறைத்து வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த இளைஞர் இலங்கை பாஸ்போர்ட்டிலே கொழும்பு திரும்பினார். ஆனால் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சகல சிங்கப்பூர் பாஸ்போர்ட்டுக்களிலும் கையெழுத்திடப்பட்டிருந்தன. மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்கும் செல்லுவதற்கு செல்லுபடியாகக்கூடிய வீஸாக்களும் அந்த இளைஞரிடம் இருந்து கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பாஸ்போர்ட்டில் இனிச் செய்ய வேண்டியது. படத்தை ஒட்டுவது மட்டுமே.

இப் பாஸ்போர்ட்கள் தலா 2 லட்சம் ரூபாவிற்கு கொழும்பில் விற்கப்படுவதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ)

## சாவகச்சேரியில் வேட்டுக்கள்

சாவகச்சேரி ஆகஸ்ட் 17

சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமைகாலை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதை அடுத்து சந்தையில் கூடி நின்றவர்கள் பதற்றம் அடைந்தனர். சிலர் சந்தைக்கு செல்லாது இடையில் திரும்பினர்.

பயிற்சியின் நிமித்தம் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக பின்னர் தெரிய வந்தது. அதன் பின்னர் நிலைமைசீரடைந்தது.

இதேவேளை திங்கள் இரவு ஷெல் சத்தங்களும் கேட்டன. (ஓ-31)

பயிலுநர் ஆசிரியர் நியமனம்

## முன்னர் தெரிவானோர் கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 17

1987ஆம் ஆண்டில் ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு நடந்த எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தி, நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டும். ஆசிரிய சேவை முன் பயிற்சிக்கு அழைக்கப்படாதவர்களை, உடனடியாக யாழ் கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இது சம்பந்தமாக அறிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு கல்விச் சேவை ஆணைக் குழுவினால் வர்த்தமானி மூலம் கோரப்பட்ட கணித, விஞ்ஞான, ஆரம்ப, உதவி ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, சேவை முன் பயிற்சிக்கு அழைக்கப்படாதவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது.

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களைச் சேர்க்கும் திட்டத்தின் கீழும் அவர்கள் விண்ணப்பம் செய்து நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படாதிருப்பின், கல்விச்சேவை ஆணைக்குழுவினால் முன் அனுப்பப்பட்ட நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதத்துடன் யாழ் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் — என்று இது சம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

## சுன்னாகம் மக்கள் வங்கியில் நிவாரணம்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 17

மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையில் இன்று வியாழக்கிழமை மீளக் குடியமர்வு நிவாரணம் வழங்கப்படும்.

முன்னர் பெயர், திகதி என்பன அறிவிக்கப்பட்டும் பெறத் தவறியவர்களுக்கே இன்று நிவாரணப் பணம்வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிவாரணம் பெறவுள்ள பகுதிகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு;-

- ★ சங்குவேலி - 38
- ★ தாவடி - 126
- ★ புன்னாலைக்கட்டுவன் - 136
- ★ ஏழாலை வடக்கு - 115

சம்பந்தப்பட்டவர்கள் அவ்வப்பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## பெற்றோர் காத்திருந்து ஏமாற்றம்

வல்வெட்டித்துறை, ஆக 17

வல்லைச் சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டவர்கள், எதிர்பார்க்கப்பட்டது போல, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்படவில்லை.

அமைதிப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதிக்கு இணங்க, கைதானவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்த்து அவர்களின் பெற்றோரும், உறவினரும் ஆவலுடன் காத்திருந்து ஏமாற்றம் அடைந்தனர்.

இவர்களை விடுவிக்க அமைதிப் படைத் தரப்பில் சில நிபந்தனைகள் விதிக்கப்படலாம் என ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. (அ-160)

தெற்கில்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினரால் பின்னர் அது செயலிழக்கச் செய்யப்பட்டது.

★ பொரளையில் உள்ள ஐ. தே. க. பிரமுகருக்குச் சொந்தமான விளையாட்டுக் கழகம் ஒன்றை இனந்தெரியாத நபர்கள் நேற்றுத் தாக்கினர். அப்போது இரண்டு பேர் காயமடைந்தனர்.

★ அம்பாந்தோட்டையில் இரண்டு இராணுவ வீரர்கள் அவர்களின் வீடுகளில் இருந்து வெளியே இழுத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொக்கிளாய் முகாமில் கடமையாற்றி வந்த இந்த இரண்டு இராணுவ வீரர்களும் விடுமுறையில் வீட்டுக்குச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றது. (ஓ-எ)

## ஜெயலலிதா விவரம் தெரியாதவர்

## தி.மு.க. அமைச்சர் கிண்டல்!

ஜெயலலிதா முடக்கு வாதத்தினால் மட்டுமல்ல, மூளை வாதத்தினாலும் கஷ்டப்படுகிறார்.

தி.மு.க. அமைச்சர் துரைமுருகன் முன் கண்டவாறு கண்டித்தார்.

அறிக்கை ஒன்றில் அமைச்சர் துரைமுருகன் தெரிவித்ததாவது:

வளைக்குள் இருந்துகொண்டு எவரோ விவரம் தெரியாத அப்பாவிகள் சொல்லுவதை எல்லாம் அரசியல் என்று கருதிக்கொண்டு கழக ஆட்சி மீதும் கலைஞர் மீதும் ஜெயலலிதா களங்கம் கற்பித்து வருகிறார்.

இப்படி அமைச்சர் தெரிவித்தார். (எ)

ஈ: பி. ஆர். எல். எவ்வினரால்

## 47 மூடை நெல்லும் டிராக்டரும் மீட்பு

### உரியவர் சாவகச்சேரியில் பெறலாம்

யாழ்ப்பாணம், ஆக. 17

பரந்தன் பகுதியில் கொள்ளையிடப்பட்டதாகக் கருதப்படும் 47 மூடை நெல்லும் ஓர் உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பகுதி ஈ. பி. ஆர். எல் எவ். உறுப்பினர்களால் இவை கைப்பற்றப்பட்டன.

பொய்த் துப்பாக்கிகளைக் காட்டித் தாம் ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறியே சம்பந்தப்பட்ட நபர்கள் கொள்ளையை நடத்தினர் என்றும்—

கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரம் கடத்தப்பட்ட ஒன்று என்றும் - ஈ. பி. ஆர். எல். எவ். விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நபர்கள் இப்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட 44 ஸ்ரீ 5627 என்னும் இலக்கம்கொண்ட உழவு இயந்திரத்தின் சொந்தக்காரரும், நெல் மூடைகளின் உரிமையாளர்களும் தகுந்த ஆதாரங்களுடன் சாவகச்சேரியிலுள்ள ஈ. பி. ஆர். எல். எவ். அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## 3 ப. நோ. கூ. சங்கங்களில் கொள்ளை

கொழும்பு, ஆக. 17

களுத்துறையில் வானில் சென்ற இனந்தெரியாத கோஷ்டி ஒன்று மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 15 லட்சம் ரூபாவை கொள்ளையடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-21)

பயிலுநர் ஆசிரியர் நியமனம்:

## முல்லைத்தீவில் சனி முதல் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 17

பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் நடைபெற உள்ளன.

அறிவிக்கப்பட்டபடி பிரிவு பிரிவாகவே இந்தப் பரீட்சைகள் நடைபெற உள்ளன.

இந்தத் தகவலை முல்லைத்தீவு மாவட்டக் கல்வி அதிகாரி திரு. வி. சண்மகராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

ஏற்கனவே பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் எடுத்து வரும்படி சம்பந்தப்பட்டவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-9)

## இன்று நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 17

யாழ் போதனா வைத்தியசாலைக்கு எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று அங்கு நடைபெற உள்ளது. (ஓ-13)

## வரலட்சுமி விரதம்

சாவகச்சேரி, ஆக. 17

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் கடந்த 11ஆம்திகதிவரலட்சுமி விரதம் இடம்பெற்றது.

500க்கும் அதிகமான பெண்கள் பக்தியுடன் விரதம்அனுஷ்டித்து பூசை முதலானவற்றில் கலந்துகொண்டனர். தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் இதனை முன்னின்று நடாத்தினார்.

## அமைதிப்படைக்கு எதிராக பிரசாரம் செய்தோர் கைது!

கோயம்புத்தூர் ஆக 17

இலங்கையில் அமைதிப் படை இருப்பதை எதிர்த்து பிரசாரஞ்செய்ததாகக் கூறப்படும் ஆறு திராவிடக் கழகத் தொண்டர்களை கோயம்புத்தூர்ப் பொலீஸார் கடந்த சனிக்கிழமைகைதுசெய்தனர்.

## செய்தியாளர் தேவை

உதயன் — சஞ்சீவி பத்திரிகைகளின் வடமராட்சிப் பிரதேசச் செய்தியாளராகப் பணி புரிவதற்குத் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழில் சரளமாக எழுதக்கூடியவர்களும், ஆங்கிலத்தில் தேர்ச்சி உள்ளவர்களும், செய்தித்துறையில் ஈடுபாடும், அனுபவமும் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆகக் குறைந்தது ஜி. சி. ஈ. உயர் தரத்தில் அல்லது சிரேஷ்ட தராதரப் பத்திரத்தில் சித்தி அடைந்திருத்தல் அவசியம்.

வடமராட்சியை (குறிப்பாக பருத்தித்துறை அல்லது வல்வெட்டித்துறையை) நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் முழு நேரச் செய்தியாளராகப் பணியாற்றுமாறு கேட்கப்படுவர். அதற்கேற்றவாறு மாதாந்த ஊதியம் வழங்கப்படும்.

உறவினர் அல்லாத வடமராட்சியைச் சேர்ந்த இரண்டு பிரமுகர்களின் நற்சான்றிதழ்களுடனும், தராதரப் பத்திரப் பிரதிகளுடனும் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர்
நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட் லிமிட்)
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17 - 08 - 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org